பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 03 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 7 (19 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 187

When, only
The best is
Good Enough



Buy
Solide Pumps

நாமானதே சிறந்தது
என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

யுத்த நிறுத்தத்துக்கு வரவேற்பு; அதே வேளை

உத்தியோக பூர்வ அழைப்பு விடுத்து சுமுகநிலை உருவாக்காதவரை பேச்சு இல்லை.

தமது நிலைப்பாட்டை விளக்கி விடுதலைப் புலிகள் அறிக்கை

முச்சந்தி முரளி

யாழ்ப்பாணம், செப். 19

இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தத்தை வரவேற்றும்—

அதேவேளை, இந்திய அரசு தம்மை உத்தியோகபூர்வமாகப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, சுமுகமான சூழ்நிலையை உருவாக்காதவரை, அதனுடன் பேசப்போவதில்லை என்றும் தெரிவித்து —

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை விளக்கி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயலகத்தின் அரசியல் பிரிவினால் 18-09-88 திகதியிட்டு விடுக்கப்பட்ட அந்த அறிக்கை விவரம் வருமாறு :-

கடந்த வருடம் அக்டோபர் 10 ஆம் திகதி தமிழீழ — இந்தியப் போர்தொடங்கிய காலத்தில் இருந்து பல முறை நாம் இந்திய அரசிடம் இந்த அநியாயப் போரை நிறுத்தி, தமிழீழ மக்கள் பிரச்சினையைப் பேசித்தீர்க்கும்படி கேட்டுக்கொண்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழித்தால் அன்றி, தமது நியாயமற்ற தீர்வுகளை தமிழீழ மக்கள் மீது திணிக்க முடியாது என உணர்ந்த இந்திய அரசு, புலிகளை எப்படியும் அழிப்பது எனக் கங்கணம் கட்டி நின்றது.

ஏற்க மறுத்தது

கடந்த டிசெனொரு மாதப்போரில், இந்திய அரசால் தமிழீழ மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தார்கள். பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்; பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்; பல நூறு கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

பதினொரு மாதங்களின் பின் இராணுவத் தீர்வின்மூலம் எதையும் சாதிக்க முடியாது என்பதை இந்திய அரசு புரிந்துகொண்டிருக்கிறது. அண்மையில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தம் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

நிரந்தர யுத்த நிறுத்தம் வேண்டும்

தமிழீழமக்களின் பிரச்சனை பேச்சு வார்த்தைகள்மூலம்தான் தீர்க்கப்படல்வேண்டும் என்பதாலும், அநியாயப் போரினால் தமிழீழத்தில் அழிவைத் தவிர, ஓர் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கமுடியாது என்பதாலும், இந்த யுத்த நிறுத்தத்தை நாம் வரவேற்கிறோம். இது, காலவரைக்குள் அடக்கப்படாமல் ஓர் நிரந்தர

(8 ஆம் பக்கம் பார்க்க)

அப்படிச் செய்தி எதுவும் இல்லையாம்

யாழ்ப்பாணம், செப். 19

போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை பற்றி விடுதலைப்புலிகள் தலைவருக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி கிடைத்தது பற்றி ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற் கடந்த 17ஆம் திகதி யாழ்நகரில் நடந்த வடக்கு – கிழக்கு பிரசைகள் இணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அப்படியான செய்தி எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. அது கிடைத்ததாக நாம் ஊர்ஜிதம் செய்யவும் இல்லை.

இப்படி தமிழீழவிடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (இ)

அல்வாயில் கைதான மூவரும் விடுதலையாகினர்

பருத்தித்துறை, செப்.19

அல்வாய்ப்பகுதியில்கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவரும் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேசசபைப் புலோலி உப அலுவலக ஆயுள்வேத டாக்டர் எஸ். வேலும் மயிலும், இளைப்பாறிய அதிபர் திரு. சுகுணகண பதிப்பிள்ளை, இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் திரு. எஸ். செல்வத்தம்பி ஆகியோரே இம் மூவரும் ஆவர்.

இவர்கள் மேல் விசாரணைக்காகக் காங்கேசன் துறை இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுதலை செய்யக்கோரி பருத்தித் துறைப்பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ். விசாகசுந்தரம், கரவெட்டிவர்த்தகசங்கச் செயலாளர் திரு. எஸ். பொன்னம்பலம் ஆகியோரின் தலைமையில் இந்திய அமைதி காக்கும் படையினரின் முகாமுக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது தெரிந்ததே. (இ-118)

படையினர் பாதுகாப்பு

மட்டக்களப்பு.செப் 19

மட்டக்களப்பு நகரிலுள்ள ரெலோ, ஈ.பி.ஆர். எல். எவ். அலுவலகங்களுக்கு இந்திய படையினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தாம் பாதுகாப்பு கோரவில்லை என்றும் படையினர் விரும்பி வழங்கியிருப்பதாகவும் இயக்கப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். (இ-21)

வல்வையில் நடந்த உண்ணாவிரதம்

வடமராட்சி, செப் 19

வடமராட்சியில் திலீபன் ஞாபகார்த்த முதலாவது அடையாள உண்ணாவிரதம் வல்வையில் நேற்று ஆரம்பமானது.

வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்றுக்காலை 9-00 மணியளவில் நூற்றுக்கணக்கான மக்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்த ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை வல்வைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ் செல்வேந்திரா நேற்று மாலை5-00 மணி அளவில் குளிர்பானத்துடன் முடித்து வைத்தார். (இ-160)

பர்மாவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

ரங்கூன், செப், 19

பர்மாவில் இராணுவம் நேற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இராணுவத் தலைவர் அரசுப் பொறுப்பை ஏற்றிருப்பதாக பர்மா வானொலி அறிவித்தது.

★ சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படும்.
★ வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும்.
★ பல கட்சிகள் கலந்துகொள்ளும் தேர்தல் நடத்தப்படும்.
★ தேர்தலில் கலந்துகொள்ள சகல அரசியல் கட்சிகளும் தயாராக வேண்டும்.

புதிய இராணுவத் தலைவர் மக்களுக்கு விடுத்த செய்தியில் இவற்றைத் தெரிவித்தார்.

ஆனால் எப்போது தேர்தல் நடத்தப்படும் என்பதை அவர் சொல்லவில்லை. எல்லா இலக்குகளும் அடையப்பட்டபின்னரே தேர்தல் நடத்தப்படும் என்றுமட்டும் அவர் சொன்னார். (இ-எ)

மட்டக்களப்பு-அம்பாறை பகுதிகளிலும் துக்கதினம்

மட்டக்களப்பு, செப் 19

திலீபன்ஓராண்டுநினைவு முன்னிட்டு மட்டக்களப்பு-அம்பாறைமாவட்டங்களிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

வங்கிகள், அரசதிணைக்களங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. சுகாதாரம், கூட்டுறவு, போக்குவரத்து, பாடசாலை என்பன மட்டும் செயல்படுகின்றன.

மாவட்டத்தின் பல இடங்களிலும் திலீபனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும்பதாகைகள், சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

26 ஆம் திகதி ஆலயங்களில் அன்னதான வைபவங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் இம் மாவட்டங்களில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படும். (இ-21)

யுத்த நிறுத்தம் நீடிக்கப்படலாம்
இன்று அறிவிப்பு வரலாம்

யாழ்ப்பாணம், செப். 19

இந்திய அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம் பெறுவதற்கு ஏதுவாக, யுத்த நிறுத்தம் இருபதாம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கப்படும் என நம்பிக்கையாக அறியவருகிறது.

இந்த அறிவித்தல் இன்று அல்லது நாளை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்ததுடன் தொடர்பாகவும், பேச்சுவார்த்தை சம்பந்தமான ஏனைய தகவல்களும் விடுதலைப்புலிகளின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

19 – 09 – 1988
புரட்டாதி – 03
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.02முதல் 01.32வரை
ராகுகாலம்:
07.32முதல் 09.02வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி நவமி

விடுதலைப்புலிகள் தவிர்ந்து
ஏனைய தமிழ் அமைப்புகள்
போது வேட்பாளர் பட்டியலுக்கு தயார் என்கிறார் ஷெல்டன் ரணராஜா

கொழும்பு, செப். 19

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழர் அமைப்புக்கள் பொதுவேட்பாளர் பட்டியல் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சமர்ப்பிக்க சம்மதித்துள்ளனர் வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஷெல்டன் ரணராஜா இப்படித் தெரிவித்தார் என்று 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுவேட்பாளர் பட்டியலில் இடம் பெறவுள்ள சிங்கள, முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறி

(8ஆம் பக்கம் பார்க்க)

செய்திச் சாரம்

● டிக்ஸிற் வவுனியாவில்

கொழும்பு, செப். 19

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் டிக்ஸிற் நேற்று வவுனியாவுக்குச் சென்று பிரசைகள் குழு உறுப்பினர்கள் உட்பட முக்கியபிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார். (இ-எ)

சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, செப் 19

கொழும்பு ஹல்ஸ்டோர்ப் உயர்நீதி மன்றவளாகத் திறப்பு விழாவைஇலங்கைச் சட்டத்தரணிகள்சங்கஉறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

சட்டத்தரணி வியனராச்சி பொலீஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்த சம்பவம்தொடர்பாகவே இப்பகிஷ்கரிப்பு இடம் பெற்றது. (இ-எ)

பொலீஸ் நிலையம் மீது தாக்குதல்

கொழும்பு, செப்.19

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கொன்வேவா பொலீஸ் நிலையம் சனிக்கிழமை அதிகாலை தீவிரவாதிகளினால் தாக்கப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

பொலீஸ் அதிகாரி ஒருவர்இதில் படுகாயமடைந்தார். மூன்று தானியங்கித் துப்பாக்கிகள் தீவிரவாதிகளினால் கைப்பற்றப்பட்டனஎன்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் திருப்பித் தாக்கியதில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார். (இ-எ)

பிரேமதாச சீனா பயணம்

கொழும்பு. செப்.19

பிரதமர் பிரேமதாச நேற்றுமாலை சீனாவுக்கு உத்தியோக விஜயம் ஒன்றை மேற்கொண்டு உள்ளார். (இ-எ)

ஐவருக்கு கத்திவெட்டு

யாழ்ப்பாணம் செப் 19

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 5 பேர் கத்திவெட்டுக்கு இலக்கானார்கள் மானிப்பாய். உடுவில் பகுதியில் சனிக்கிழமை பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

மாமரத்தின் கிளைகள் அடுக்க வீட்டு வளவுக்குள் சென்றதன் காரணமாகவே இந்தத் தகராறு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது

கணவன், மனைவி பிள்ளைகள்ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை இவர்களைத் தாக்கியவர் என்று கூறப்படுபவரும் காயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முருகர்பாலு (வயது67) பாலு சரஸ்வதி (வயது 59), பாலு தியாகராசா (வயது 46), சவரிமுத்து ராஜேந்திரன் (வயது46) எஸ் கந்தசாமி ஆகியோரே காயம். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ 10)

தேர்தல் பற்றிய அறிவிப்பு

கொழும்பு. செப். 19

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமான தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பு இன்று வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-ஒ)

கிழக்கில் அமைதி

மட்டக்களப்பு. செப் 19

யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்ட பின்பு மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களில் யுத்த நிறுத்த மீறல் சம்பவம் ஏதுவும் இடம்பெறவில்லை பூரண அமைதி நிலவுகிறது.

யுத்த நிறுத்தம் மாலை வடக்கு-கிழக்கு இணைப்புப் பிரகடனம் ஆகியவை தொடர்பாக இந்தியப்படையினர் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்

இது பற்றி ஒலிபெருக்கியிலும் அறிவித்தல் செய்தனர். (இ-21)

நேற்றைய உண்ணாவிரதத்தில் மாணவர்கள் பெருமளவு பங்கு

யாழ்ப்பாணம். செப் 19

திலீபனின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி நல்லூரில் நடத்தப்பட்டுவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று மாணவர்கள் பெரும் அளவில் பங்குபற்றினர்.

நேற்று பல தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாணவர் ஒருங்கிணைப்பு குழுவினரும் மற்றும் பிரசைகள் குழு அன்னையர் முன்னணியைச் சேர்ந்தவர்களும் தொடர்ந்து நேற்றுடன் நான்காவது நாளாக அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்று திலீபனின் படம் வைக்கப்பட்டு விளக்கும் ஏற்றப்பட்டிருந்தது. (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சகலவித பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கசற்ரேடியோ, மெஷின் Record Player, Cake Mixer, சாப்பாட்டு மேசை, கதிரைகள், கண்ணாடி மேசை, Easy Chair, Show case, Baby cot, கட்டில்கள், Toaster, Boiler கேற்றில், விருந்தை கதிரைமேசைகள், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் ரோட். யாழ்ப்பாணம். (6680)

Lohmann இன சிவப்பு வெள்ளை முட்டையிடும் ஒருநாள் பேட்டுக்குஞ்சும், புரொயிலர்குஞ்சும் மற்றும் சேவல் குஞ்சும் 17-9-88 முதல் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு.- M. G. M. Forage Stores No. 208, Ist Cross St, Jaffna. (6513)

கடை விற்பனைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் சிறு வயிரவ கோவிலடியில் உள்ள இரு கடைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; திரு. தி. திருநாவுக்கரசு தபாலதிபர், 55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (6685)

திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

இலத்திரனியல் ஆண்டு—11

விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதவும் வகையில் விளக்களுடன் உள்ளடங்கிய மேற்படி புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகின்றது. (6693)

தேவை

ஸ்ரான்லி ரோட்டில் அமைந்திருக்கும் T. V, Radio உதிரிப்பாக விற்பனை ஸ்தாபனத்திற்கு பெண் கணக்காளர் அல்லது காசாளர் தேவை. 25 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். அனுபவம் உள்ளவருக்கும், முற்பணம் கட்டக்கூடியவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ரேடியோ திருத்துதல் பழகுவதற்கும் 12—17 வயதிற்கும் இடைப்பட்டோர் விண்ணப்பிக்கலாம். Mini Trade Centre, No. 3. J.M.C Building, Jaffna. (6522)

மணமக்கள் தேவை

உயர் வேளாளகுலம், சைவபோசனம், லண்டனிலுள்ள 31 வயது கணக்காளனுக்கு லண்டனிலுள்ள அல்லது அங்கு போகக்கூடிய அழகான மணப்பெண் தேவை. இலங்கை அரசாங்கத்தில் கௌரவமான உத்தியோகத்திலுள்ள 32 வயதுப் பெண்ணுக்கு சமமான அந்தஸ்திலுள்ள மணமகன் தேவை. இருவருக்கும் அற்ப செவ்வாய்க்குற்றம் உண்டு. சீதனம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். 194C/o உதயன், யாழ்ப்பாணம். (6691)

தேவை

கொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் மிக் இன்டஸ்றீஸ்,(Mik Industries) 26& 26/1 திருநெல்வேலி (சிவன்) புதுவீதி, யாழ்ப்பாணம். (6681)

புதிதாக ஆரம்பித்த யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்திற்கு புரியாணி தயாரிப்பதில் நன்கு அனுபவமுடையவர்கள் தேவை. நேரில் வரவும். 352, மணிக்கூட்டு வீதி. வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம் (6683)

மணமக்கள் தேவையா?

எம்மிடம் Non R. C மணமக்கள் பலர் எல்லாச் சாதியிலும் இருக்கிறார்கள். மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோர்கூட நல்ல உத்தியோகங்களில் இருக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமையில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6521)

சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர் அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம். எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு,மனையில் இலட்சுமி கடாட்சம்,சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் "சக்தி சரவணு" (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்பு பாம்பரிய பரம்பரை மந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6510)

கல்வி

G. C. E. (O/L) New Syllabus

மேற்படி பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- சகல புத்தகசாலைகளிலும்கிடைக்கும். உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள். (6651)

G.C.E. A/L Home Economics

எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள A/L மனைப் பொருளியல் செயல்முறை பரீட்சைக்கான விளக்க வகுப்புக்களும் Aug 89 மனைப் பொருளியல் பரீட்சைக்கான Theory Classes உம் ஆரம்பம் 19-9-88 பி. ப 3. 00 Kalalayaah, Victoria Road, Jaffna. (C225)

வழமைக்குத்திரும்பிக்கொண்டிருக்கும்

முல்லைத்தீவுப் பகுதியில் பாடசாலைகள் இயங்குகின்றன

மாங்குளம்,செப்.19

முல்லைத்தீவுப் பகுதியில் தனியார் வாகனங்கள், பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன. மக்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

கூட்டுறவுச்சங்கங்களால் உணவு வகைகள்தாராளமாக வழங்கப்படுகிறது. மாங்குளத்திலிருந்து பாஸ் இல்லாமல் முல்லைத்தீவு வீதியில் உணவுப் பொருள்கள் செல்கின்றன.

இப்பகுதியில் தபால் பட்டுவாடாவும் நடைபெறுகிறது. சந்தை கூடுகிறது.

முடங்கிக் கிடந்த மக்கள் சுயாதீனமாக நடமாடுவதையும் காணமுடிகிறது. (ஒ-94)

கோழிக் குஞ்சு

இரண்டு வாரங்களிற்கு முன்னர் முழுப் பணமும் செலுத்தி 250 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கீழ்வரும் விலைகளில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும்.

ரூபா சதம்

புறொயிலர் குஞ்சு 16-00
(Bairaha Farm, Three Acre Farm, Christombu Farm)
பிறவுண் சேவற் குஞ்சு 2-75
கறுப்பு சேவற் குஞ்சு 6-50
Hy-Line வெள்ளைப்பேடு 12-50
Golden Comet பிறவுண் பேடு 13-00

சற்குணராஜா & பிறதர்ஸ்
பிரம்படி லேன், கொக்குவில்.
(6568)

ம. இருதயதாஸ்

வழங்கும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்!
☆ சவூதி ☆ குவைத்
☆ டுபாய் ☆ சிங்கப்பூர்
ஹோட்டல் வெயிற்றர், றூம்போய்
H. V. றைவர், H. றைவர்
● முற்பணம் அறவிடப்படமாட்டாது ●
உணவு, இருப்பிட வசதி இலவம்!
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்
ம. இருதயதாஸ்
96, 4-ஆம் குறுக்கு வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
கிளை அலுவலகம்:
பரியா என்ரப்பிறைஸ்சஸ்
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
(6569)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 17-06-1931

உதிர்வு: 20-08-1988

அல்வையூர்

திருமதி தங்கச்சியம்மா பொன்னுத்துரை

நோயுறு முன் நினைவெலாம் எமக்கேயாக்கி தோயுறு பாசமெல்லாம் தேக்கி, அறிவுறு ஆசானாய், மாசுறு செயலைப் போக்கி, வாயுறு உணவெலாம் தேக்கி, மாயுறும் போது பரிவுற ஓடிவந்து; நயவுறக் கடிந்து, நல்வழி காட்டும், நின் பொலிவுறு உடலை நாம் இழந்தோம்: நேயமுறக் காணாது துவள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கலைமகள் வாசம்' அல்வாய் மேற்கு, அல்வாய். (6689)

காரைநகர் மீனவருக்கு போருட் கடனுதவி

காரைநகர், செப். 19

காரைநகர் வலந்தலையில் போருட் ஸ்தாபனம் வறிய மீனவர்களுக்கு தேவையான உபகரணங்களுக்கும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும்கடன் உதவி வழங்க முன் வந்துள்ளது.

கடனுதவிகள் வலந்தலையில் இயங்கி வரும் கிகௌரி ஐக்கிய நாணய சங்கத்தின் ஊடாக வழங்கூடத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்முதற்கட்டமாக வலந்தலையில் வாழும் சுமார்ஐந்துவறிய மீனவகுடும்பங்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபா வீதம் மொத்தம் பத்தாயிரம் ரூபாவை போருட் ஸ்தாபனம் ஒதுக்கியுள்ளது. (ச-73)

வவுனியாவில் பிரசுரங்கள் பலவிதம்:

டிசம்பர் 31க்கு முன் எல்லாம் நிறைவேற்றப்படுமாம்

வவுனியா, செப். 19

எந்த விதத்திலும், எக்காரணத்திலும் வாக்குப்பதிவும், (வடகிழக்கு இணைப்பு) மற்ற சலுகைகளும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் நிறைவேற்றப்படும் என்று அமைதிப்படையினர் துண்டுப் பிரசுரங்களில் தெரிவித்துள்ளார்கள்.

'இந்திய, இலங்கை, உடன்பாடு அமுலாக்க'' என்ற தலைப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

★ இணைப்பு, தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.பூஸா சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மற்றவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

★ பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் மிகவிரைவில் நடைபெறும்.

★ இந்திய அரசாங்கம் உடன்பாட்டின் ஷரத்துகளை அமுலாக்கிக் கொண்டு இருக்கிறது.

★ மக்களே! உன்னத அமைதியைத் தழுவ, தீவிரவாதிகளிடம், துவக்குகளை கையளிக்க எடுத்துரைக்க வேண்டும்.

இப்பிரசுரங்கள் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளதுடன் பயணிகள் வாகனங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-164)

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஜேர்மன் நிறுவனத்தின் உதவி

ஜெர்மனியிலுள்ள டயா கொனிசஸ் வேர்க் என்னும் உதவி நிறுவனம் மல்லாசம் கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு இனக் கலவரத்தினாலும், இராணுவ நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்நிதியைக்கொண்டு மயிலிட்டிக் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் மயிலிட்டிக் கிராமச்சங்க எல்லைக்குட்பட்ட 870 விவசாயக் குடும்பங்களுக்கு மண் வெட்டியும், புல்லுச்சத்த சுங்களையும்வழங்கியுள்ளனர்.

இவ்விவசாயஉபகரணங்களை மயிலிட்டிவடக்கு, பலாலி மத்தி,பலாலி-வயாவிளான், குரும்பசிட்டி, ஊறன்குளப், பளை-கொத்தியாவத்தை தையிட்டிகிழக்கு, மல்லாகம் ஆகியபகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வலிகாமம்வடக்கு உதவி அரசாங்க அதிபர், வை. இரசையா விநியோகம் செய்தார்.

இவ்வுதவிபற்றித் திரு. ஸ்ரீபாஸ்கரன் "உதயனு''க்குத் தெரிவிக்கையில், இதுபோன்ற உதவிகள் இன்னும் தனது சங்கத்துக்குக் கிடைக்கும் என்றும், அப்பொழுது தெல்லிப்பளை, மல்லாகம் கிராமச்சங்க எல்லைக்குள் இருக்கும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குவிவசாய உபகரணங்கள் வழங்கப்படும்என்றும்சொன்னார். (ச)

யாழ் பல்கலைக் கழக

விசேஷ கலைமாணிப் பரீட்சை 1987 பகுதி III-முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சைப் பகுதி III ல் (1987) சித்தியடைந்தோர் வருமாறு;-

பொருளியல்

சி. சிவரஞ்சினி, கே. சுகந்தி, கே. ஜனனி, எஸ். கோதை, பி. மோகனும்பாள், கே. பரமசிவம், வி. பாமினி, எம். பத்மாவதி, பி. பிரேமநிதி, எம். புஸ்பராணி,கே.புவனேஸ்வரி,என். இரஞ்சிதமலர், ஆர். இராஜலஷ்மி, ஆர். இராஜமலர், என். ருக்மணிகுமாரி, எஸ். செபதாஸ், ரி. செல்வராணி, எஸ். சிவஞானஅன்பு, பி.சுரேக்கா, எம். தவமலர், ஆர். உஷா, வி. பராசக்தி, என். விஜயராணி, ஜே. கே. செல்வநாயகம், எஸ். நந்தினி, எம். நந்தினி, எஸ். பவானி.

மெய்யியல்

எஸ். நடேசகாந்தன், எஸ். கோமதி.

இந்து நாகரிகம்

கே. அருந்தவமலர், எஸ். சந்திரவதனி.

சமஸ்கிருதம்

எஸ். [illegible].

புவிநஸ்திரம்

எஸ். அன்ரோனியனஸ், பி. அறிவழகி, கே. பாஸ்கரதேவி, எம். சி. மேரி விக்ரோரியா கே ஜெயநந்தகுமாரி, பி. ஜெயந்தி, எஸ். சோதிமலர், எஸ். கலாஜோதி, எஸ். கோமதாஸ், என். சுமதி, என். ஆன்துஸ்யந்தி, என். மீரா, வி. பி. நிர்மலா, ஜி. ரெபேட், கே. சரஸ்வதி, எஸ். சுமித்திரா, ஏ. சிவபாலசுந்தரம்,எஸ்.ஸ்ரீலஷ்சுமி, கே. சுபைத்திரா, கே. திருமனைச்செல்வி, எஸ். கே. வளர்மதி, எஸ். வனஜா,எஸ். விஜராணி, ஏ. விஜயகுமார், சுட்டெண்3208-பரீட்சை முடிவு தடைசெய்யப்பட்டுள்ளது

தமிழ்

எஸ். சந்திரராணி, ஆர். கோமளகௌரி, என். சுலோவாணி, பி. செந்கதிர்செல்வன், ஜே. செந்தில்குமாரி, வி. வனஜா, எஸ். கலாநிதி. கே. எழில்வேந்தன்

சரித்திரம்

எம். கோமதி, எம். ஷயாவி, ரி, ரஜனு, ஜே. ஆர். அனெஸ்ரிக்கா, எஸ். சற்குணவதனி, ஏ. சுரேந்தினி, எம். உமா சங்கரி, கே. வரதலஷ்மி, வை. பிராகலா,

அரசியல் விஞ்ஞானம்

கே. டி. ஜுட் செல்வராஜன், எஸ். சோதிலிங்கம்,எம்.கமலகாந்தன், ரி. கிருஷ்ணகாந்தன், எஸ். சகாயசீலன், எஸ். சக்தீதரன், எவ். சுபோதினி, பி. கணேஷ், எம். ஜெயராணி. (ச)

போலிகண்டி மக்கள் மனவேதனை

வடமராட்சி, செப் 19

பொலிகண்டி அமைதிப்படை முகாமுக்குச் சமீபமாக, திலீபனின் நினைவுப் பந்தல் பொலிகண்டி மக்களால் வெள்ளிக்கிழமை நிறுவப்பட்டது.

நேற்றுக் காலை மக்கள் பந்தலைப் பார்வையிடச் சென்றபோது அது முற்றாகப் பிரித்து விடப்பட்டு இருந்ததாம்.

இது குறித்து பொலிகண்டி மக்கள் பெரும் மனவேதனை அடைந்துள்ளார்கள். (அ-160)

கசிப்பு ஒழிப்பு பிரசாரம்

காரைநகர்,செப்.19

காரைநகர் ஊரியிலுள்ள நல்லொழுக்க வாலிபர் சங்கமும் மகளிர் மன்றமும் அன்ரசன் விளையாட்டுக் கழகமும் சிறுவர் சங்கமும்இணைந்து தீவிர கசிப்பு, ஒழிப்பு பிரச்சார நடவடிக்கையில் இறங்கியுள்ளன. (ஒ 73)

திலீபனின் நினைவுத் தூபி திறப்பு விழா

வடமராட்சி செப்19

பருத்தித்துறை மருதடிமுருகையன் கோயில் முன் நிறுவப்பட்டுள்ள திலீபனின் நினைவுத் தூபித் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளை பொதுமக்கள் செய்து வருகின்றார்கள்.

தமிழ் ஈழமக்கள் மன்றத்தினால் நிறுவப்பட்டுள்ள மேற்படி திலீபனின் 20அடிஉயரநினைவுத்தூபி இம்மாதம் அவர் இறந்த நாளான 26 ஆம் திகதி திங்கட் கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-சி 160)

சித்த ஆயுள்வேதக் கல்வி நிலை குறித்து அதிருப்தி

வடமராட்சி, செப். 19

போதிய செயற்படுதிறன் மூலிகைகள் இன்மையால் யாழ்ப்பாண அரச சித்த ஆயுள்வேதக் கல்விப் பயிற்சித்துறை குன்றிய நிலையில்இருந்து வருகிறது.

கைதடியில் அமைந்திருக்கும் மேற்படி பயிற்சிக் கல்லூரியை அண்மையில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. எ. துரைராசா கலைப்பீடப் பேராசிரியர் திரு. என். பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமையிலான குழுவொன்று நேரில் சென்று பார்வையிட்ட பொழுது மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தனர்.

இங்கு போதிய மூலிகை வகைகள் இன்மையாலும் விசேஷ செயல்திறன் பயிற்சி இன்மையினாலும் 5 வருடப்பயிற்சியை முடித்த மாணவர்களைப் பயன்படுத்தமுடியாமல் இருப்பதாக மேற்படி குழுவினர் தெரிவித்தனர்.

இம்மாணவர்களை நாம் பயன்படுத்த வேண்டுமெனில் உலகத்திலேயே மூலிகைகளில் முன்னணியில் நிற்கும் இந்தியாவுக்கு அனுப்பி விசேஷ பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

அத்துடன் தற்பொழுது பற்றுக்குறையாக இருந்துவரும் ஆசிரியர் எண்ணிக்கையை 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் உயர்த்த முடியும் என மேற்படி குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-160)

அடிக்கல் நடும் விழாவும் திறப்பு விழாவும்

வட்டக்கச்சி செப் 19

வட்டக்கச்சிஆறுமுகம் வீதி கலைவாணி மன்ற கட்டட அடிக்கல் நடும் விழாவும் பாலர் பாடசாலை திறப்பு விழாவும் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றன.

திரு. துரைராசா கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார்.

அடிக்கல் நடும் விழாவின் பின் நடைபெற்ற கூட்டத்தில் திரு துரைராசா பேசுகையில் ''இதுபோன்ற ஸ்தாபனங்கள் மூலம் அறிவு வளர்ச்சி ஏற்படுவதுடன் மதவளர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும்'' எனக் கூறினார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட "ஒக்ஸ்பாம்' பிரதிநிதி திரு. எம்.சுப்பிரமணியம் திரு சோமஸ்கந்தர் ஆகியோரும் உரையாற்றினர். (ச-ரி)

THE COLLEGE OF HIGHER STUDIES

Anaipanthy - Jaffna.

G. C. E. (A/L) 1989 - 1990

ஆரம்பம் 21.09.1988 காலை 9-00 மணி

இரசாயனம் — Shanthakumar
பௌதிகம் — Sivananthan
தாவரவியல் — Shara (Gnani)
விலங்கியல் — Vicky
தூயகணிதம் / பிரயோக கணிதம் — Miss S. Ganesh

TOEFL and Talk English வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

(6692) - அதிபர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்

நியமனத்தில முஸ்லிம்கள் புறக்கணிப்பு

ஒருவர் மட்டும் தெரிவு என மஜ்லிஸ் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

"இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஆயிரம்ஆரம்பபாடசாலை ஆசிரியர்களில் ஒரே ஒரு முஸ்லிம் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டது யாழ் வாழ் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது."

இவ்வாறு யாழ் முஸ்லிம் கலாசார மஜ்லிஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்படுவதாவது;-

ஏனைய மாவட்டங்களில் கணிசமான அளவு முஸ்லிம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட யாழ் மாவட்டத்தில் இப் புறக்கணிப்புச் செய்யப்பட்டது கவலைக்கும் கண்டனத்துக்கும் உரிய செயலாகும்.

யாழ் மாவட்டத்தில் 6 முஸ்லிம் பாடசாலைகளும் சுமார் 10, 000 பாடசாலை செல்லும் மாணவர்களும் இருந்தும் இப்பாடசாலைகளில் போதிய அளவு முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

அண்மையில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்களின் போட்டிப் பரீட்சைக்கு 200 முஸ்லிம்கள் தோற்றியுள்ளனர்.

இங்குள்ள ஆரம்பப் பாடசாலைகளில் 50 முஸ்லிம் ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உண்டு.

எனவே கல்விச்சேவை ஆணைக்குழு தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு முஸ்லிம் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

(ச)

அதிகாரப் பரவலாக்கங்கள் சட்டபூர்வமாக்கப்படவேண்டும்

வடமராட்சி, செப். 19

மாகாண சபை அமைப்பு அதிகாரப் பரவலாக்கங்கள் போன்றவை அதிகார பூர்வமாக அமுலாக்கப்பட்டால் மட்டுமே அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்.

வடமராட்சி மாணவர் ஒழுங்கிணைப்புக் குழுவின் மாணவர் பொது நூலகத் திறப்பு விழாவின் போது தமிழ் ஈழ மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மக்களின் சுய தேவைகளை நிவிர்த்தி செய்யாமல் தேர்தல் நடத்த முனைவது ஒரு கேலிக்கூத்தாகும்.

வடக்கும் கிழக்கும் இணைந்தால் மட்டும் தமிழ் மக்களின் சுதந்திர தாகம் முடிந்து விடாது.

அவர்களுக்குரிய சுதந்திர அதிகாரப்பரவலாக்கங்கள் நடைமுறைப்பட்டால் மட்டுமே நாம் ஒத்துழைப்போம் என்று சொன்னர்.

திரு. சி. திருநாவுக்கரசுமுதலி தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் திருமதி லீலாவதி சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

வைபவத்தில் திரு. ஏ ஏகாம்பரநாதன், திரு. எஸ். பாலசிங்கம், திரு க. அனந்தராசா, வித்துவான் வேலன் ஆகியோரும் உரையாற்றினர்கள். (ச-160)

இளம் பெண் விடுதலை

திருகோணமலை செப் 19

1984 அக்டோபர் மாதம் கிண்ணியா மக்கள் வங்கியில் இடம் பெற்ற கொள்ளை தொடர்பாக கைது செய்யப்பட்டு நீர் கொழும்பு சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த ஆலங்கேணியைச் சேர்ந்த சரோஜினிதேவிஎன்னும் இளம் பெண் சென்ற கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

இவருடன் சேர்த்து திருகோணமலையைச் சேர்ந்த மொத்தம் 11 பேர் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ச-150)

திருமண நன்றி நவிலல்

02 - 09 - 88 இல் எமது வீட்டில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், வாழ்த்துக்கள், பரிசுப்பொருள்கள் அனுப்பியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மாகியப்புலம்,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

திரு. க. பத்மநாதன்
திருமதி பாக்கியரஜனி, பத்மநாதன்
திரு. திருமதி சிவராசசிங்கம்

(C 228)

நினைவஞ்சலிகள்

திரு. செல்லப்பா சிவசுப்பிரமணியம்

தோற்றம் : 22-09-1908 மறைவு; 14-03-1987

செல்வி சிவசுப்பிரமணியம் புரந்திராதேவி

தோற்றம் : 25-09-1954 மறைவு : 30-09-1987

அன்புத் தெய்வங்களே! எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீர்களே! மாய்ந்த உங்கள் நினைவால் மனம் நொந்து வாழ்கின்றோம். உங்கள் அருமை முகத்தை எம்மால் காண முடியாதென எண்ணும்போது எங்கள் இதயம் வெம்புகிறதே! உங்கள் ஆத்மா சாந்தியடைய முதலாவது திதி நாளாகிய இன்று இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி அஞ்சலி செய்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்,
மாமன்மார், அத்தான்மார்,
பெருமக்கள்.
மற்றும் உறவினர்கள்.

3ஆம் கட்டை, கல்வியன்காடு.

(C/74)

தமிழினத்தின் விடிவெள்ளி பார்த்திபனே!

லெப். கேர்னல் திலீபன்

தமிழ் அன்னை மடியில்
29-11-1963

தமிழ் மண்ணின் அணைப்பில்
26-09-1987

வீரத்தால் வீழ்ந்துவிட்டாய் வீரனே
விண்ணவர்க்கோ விருந்தேயானாய் - நெஞ்சின்
ஈரத்தால் இனங்காக்க உயிர் தந்தாய்
உடலுந் தந்தாய் தாராத தென்னையா நீ!
ஆரைத்தான் நம்புவதோ ஆர்க்கெடுத்துக்
கூறுவதோ ஆருயோடும் எம்கண்
நீரைத்தான் சொரிந்துனது தாகம் தீர்த்து
நினைப்பகல மாட்டாமல் நிற்கின்றோமே!

பருத்தித்துறைமுனை கடற்றொழிலாளர் சங்கமும்,
வடமராட்சி மக்களும்.

(C 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERSONAL CLASSES

for

PHYSICS

ஆசிரியர்:

R. சத்தியசீலன்

DAY CLASSES

(திங், செவ், புதன், வியா, வெள்ளி)

Batch I: 9.00 - 10.15 a.m.

Batch II: 1.30 - 2.45 p.m.

ஆரம்பம்: 19-09-1988

திங்கள்; 9.00 a.m.

(முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.)

குறிப்பு: A/L 89, A/L 90 சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இல. 21, மணல்தரை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C 212)

VACANCIES IN SAUDI ARABIA

1. ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners } 400 SR
2. எயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners } 400+100

வயதெல்லை 21 - 49 வரை

இரண்டு வாரத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.

T. V. TRAVELS & TOURIST

Brown Road,
(Railway Station Front)
KOKUVIL.

(C/208)

எச்சரிக்கை

வாடிக்கையாளர்களே!

உங்கள் அபிமான சிக்மா மின் மோட்டர்களை வாங்கும்போது மிகவும் அவதானித்து வாங்கவும். நாம் உற்பத்தி செய்யும் எல்லா பம்ஸிலும் "CEYGMA" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்.



- போலியான நீல நிற பம்புகளை வாங்கி ஏமாறுதீர்கள்
- "CEYGMA" என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள்

CEYGMA PUMPS

சிக்மா பம்ப்ஸ்

United Agro Engineering
274/1, ஆஸ்பத்திரி வீதி,
பெரியாஸ்பத்திரி முன்பாக
யாழ்ப்பாணம்.

(C-105)

திருமலையில்

ஆழ்கடல் மீன்பிடி, கோழி வளர்ப்புக்கு கனேடிய அரசு ரூ.11 லட்சம் உதவி

திருகோணமலை, செப்.19

ஆழ்கடல் மீன் பிடித் திட்டம், விதவைகளுக்கான கோழி வளர்ப்புத் திட்டம், பொதுக்கிணறுகள் தோண்டுதல் ஆகிய பணிகளுக்காக கனேடிய அரசு 11 இலட்சம் ரூபாவை திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்துக்கு4,80,000/- ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனைக்கொண்டு அகதிகள் நலன்புரிச் சங்கம் திருக்கடலூரில்ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்தை ஆரம்பித்துவைத்து திறம்படச் செயல்பட்டு வருகிறது.

10 இயந்திரப் படகுகள் இங்கு தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் மீனவர்கள் அதிக நன்மை அடைந்து வருகின்றனர் என்று அகதிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். ஞானசேகரன் கூறினர்.

கனேடிய அரசு 1,30,000/- ரூபாவைப் பொதுக் கிணறுகள் தோண்டுவதற்காக வழங்கியுள்ளது.

இதன்மூலம் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புளியடிச் சோலை என்னும் கிராமத்தைத் தெரிவு செய்து அங்கு 5 பொதுக் கிணறுகளை நலன்புரிச் சங்கம் கட்டியுள்ளது.

இந்தக் கிராமத்தில் உள்ள 120 குடும்பங்கள் இதுவரைகாலமும் ஒரே ஒரு கிணற்றைத்தான் உபயோகித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

விதவைப் பெண்களுக்குக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக கனேடிய அரசு 5 இலட்சம் ரூபாவை நலன்புரிக் கழகத்துக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் 100 விதவைப் பெண்கள் பயனடையவுள்ளனர். ஏற்கனவே 33 கோழிப்பண்ணைத்திட்டங்கள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருவதாக நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டாக்டர் எஸ். ஞானசேகரன்தெரிவித்தார்.

அவை நகரம், ஆலங்கேணி, மூதூர், சாம்பல் தீவு, திரியாய், கும்புறுப்பிட்டி, முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

மிகுதியுள்ள 67 திட்டங்களும் அக்டோபர் மாதம் முடிவடைவதற்குள் செயல்படுத்தப்படும் என்றும் டாக்டர் எஸ். ஞானசேகரன் மேலும் தெரிவித்தார்.

(இ-150)

யாழ்ப்பாணம் - இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை-1989

01. இப்பரீட்சை 22- 10- 1988 சனிக்கிழமை நடைபெறும்.
02. தற்போது ஆண்டு 5இல் கல்விகற்கும் மாணவர்கள்மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கட்டணமாக ரூபா பத்து (10/-) செலுத்திக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 10/-க்கான காசுக்கட்டளை/ அஞ்சற் கட்டளையையும் தமது சுயமுகவரி எழுதப்பட்ட, முத்திரை ஒட்டப்படாத 9'' x 4'' அளவான கடித உறையினையும் அனுப்பி விண்ணப்பப் படிவங்களைத் தபால மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 7- 10- 1988 வெள்ளிக்கிழமைக்கு முன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். 7- 10- 1988ந் திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள்நிராகரிக்கப்படும்.
06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரம் 15- 10- 1988க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பெற்றோர்/ பாதுகாவலருக்குத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

ச. பொன்னம்பலம்
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்

[C23 6)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
க. சண்முகரட்ணம் (சாந்தன்)
மலர்வு: 1965- 11-04 உதிர்வு: 1987- 09- 19
திதி: 1988- 10- 07

தாயக விடுதலைக்காய் தயாராணுய் தாங்கிய அணியினராள் தனையே ஈந்தாய் எங்களுக்குள் இரு கருத்து இருக்குமட்டும் எப்போதும் துயரம் தான் விடிவே வாரா. மகனே நீ மறைந்தின்று ஓராண்டாச்சு மனமெல்லாம் உன் பிரிவால் வாடுதய்யா!

உன்பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதரர்கள்,
தமிழகம்,
முல்லைத்தீவு ரோட், பருத்தி. (6668)

கடமையில் கட்டுப்பாடும் கண்ணியமும் வாய்ந்தவர்

கொடிகாமம், செப்.19

"கடமையில் கட்டுப்பாடும் கண்ணியமும் வாய்ந்தவர். சக உத்தியோகத்தருடனும் பொதுமக்களுடனும் சகஜமாகப் பழகி அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றுவார்"

சாவகச்சேரி சமநலச் சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சோ. பரமசிவ ராஜாவின் சேவை நலம் பாராட்டு விழாவில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. க. வேலாயுதம் மேற்கண்டவாறு கூறினர்.

கிளிநொச்சி சமநலச் சேவை நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள திரு. சோ. பரமசிவராசாவின் சேவை நலம் பாராட்டு விழா மீசாலை பயிர்ச்செய்கை நிலைய விவசாயப் போதனாசிரியர் திரு. எஸ். சோமநாதன் தலைமையில் நடைபெற்றது. [சி-75]

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்க
அங்குரார்ப்பணக் கூட்டம்

இடம்:- யா/புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபம்
காலம்:- 03- 10- 1988 திங்கள் பி. ப 2. 30 மணி

பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நன்றி
செ. நல்லையா
(அதிபர்)

(6555)

கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி

பீகொக்

கூந்தல் சாயம்

யப்பானிலிருந்துநேரடியாகஇறக்குமதி செய்யப்படுகின்றது!
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத்தொடர்புகொள்ளுங்கள்!
விலைரூபாய் 50/=க்குமேல்
சந்தையிடுத்துவோர்
சக்தி (முரைவட) லிமிட்டெட்
6.26.2ம் மாடி, மத்தியதொழும்பு சுப்பர் மார்க்கெட்
தொழும்பு:11
Colombo Central Super Market. Colombo:11

LANKA COMMERCIAL ARTISTS

தேவை

(1) வான் செலுத்த சாரதி தேவை
வயது:- 40 க்கு மேல்
குடும்பப் பொறுப்பில்லாதவர்

(2) திருமுறை வகுப்பு நடத்த
சிறந்த தகைமையுள்ளவர் தேவை
வயது:- 25— 30க்குள்
தகைமைச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(6562)

WANTED
CHUNDIKULI
GIRL'S COLLEGE

An experienced teacher to teach Shorthand and Typing (in English), Apply before 23rd September, 1988.

-PRINCIPAL.

(C/233)

கம்பியூட்டர் விரிவுரைகள்

BASIC

with Practical
in world famous
Commodore Computers
4- Months

ஆரம்பம்: 21- 9- 88

Fees மாதம் 250/- [மட்டுமே!

சான்றிதழ் உண்டு

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Leaders in Computer Education)
16, 3 ஆம் குறுக்கு வீதி,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

(C/182)

புதிய உயர் கல்லூரி

A/L 89 ஆம் ஆண்டிற்கான
(சனி, ஞாயிறு)
1 வருட வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

A/L 89ஆம் ஆண்டிற்கான
DAY CLASSES
ஆரம்பம் - 03 - 10 - 88

A/L 90 ஆண்டிற்கான வகுப்புகள்
ஆரம்பம் - 24 - 10 - 88

SPOKEN ENGLISH

with GRAMMAR

4 ஆம் பிரிவு வகுப்புக்கள் 03 - 09 - 88 ஆரம்பமாகிவிட்டது

விபரங்களுக்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

(C-173)

தொழிற் பயிற்சிகள்

பின்வரும் பயிற்சிகளுக்கு 16-23 வயதுக் குட்பட்ட ஆண்களிடமிருந்து 30- 9- 88 இற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விவசாயம் ஒரு வருடம் கட்டணம் இல்லை.
2. வெல்டிங் 4 மாதம் கட்டணம் மாதம் ரூபா 400/- முழுப்பயிற்சிக்கும் ரூபா 1,600/-

இப் பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.

தங்குமிடமும் உணவும் இலவசம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
வை. எம். சி. ஏ. இளைஞர்,
பயிற்சி நிலையம், பரந்தன்.

(C61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கையும் கிழக்கையும் துண்டாட திட்டமிட்டசதி வெலிஓயாத் திட்டம்

காலங்காலமாக எமது நிலங்களை அபகரித்து வந்த ஸ்ரீலங்கா அரசு இன்று மகாவலி 'எல்' திட்டமென்ற பெயரில் மேற்கொள்ளும் வெலிஓயாத் திட்டத்தின் மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாட சதி செய்கிறது.

ஒவ்வொரு உடன்பாடு ஏற்பட்டபோதும் குடியேற்றங்களை நிறுத்துவதற்கு இணங்கிய அரசு பின் தன்னிச்சையாக அவற்றை உருவாக்கி வந்தது கண்கூடு. சுமார் 13,500 தமிழ் பேசும் குடும்பங்களை நிர்ப்பந்தமாக இடம் பெய்ர வைத்து மேற்கொள்ளப்படும் வெலிஓயாத் திட்டத்தின் பாதிப்புக்கள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் தருவதாக வாக்களிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டை இல்லாதொழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் வெலிஓயாத் திட்டத்தை நிறைவேற அனுமதிப்பது என்பது இந்த ஒப்பந்தத்தில் மேலும் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழக்க வகை செய்யும்.

★ நம் தாயகத்தின் எல்லைகள் சுருங்குகின்றன. இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. நம் வாழ்வுடன் இணைந்த மண்ணும் உறுபயிர் செய்யும் நிலமும் அபகரிக்கப்படுகின்றன.

★ முல்லைத்தீவுமாவட்டத்திற்கும், திருகோணமலை மாவட்டத்திற்கும் இடைப்பட்ட மணலாறு பிரதேசம் வெலிஓயா என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

★ மகாவலி ''எல்'' திட்டமென்ற போர்வையில் மணலாறு பிரதேசத்தில் குடியேற்றம் செய்வதற்கு தண்ணீரூற்று, குமுளமுனை, அலம்பில் முதலான நாயாற்று ஏரிக்கு மேற்குப்புறமான நமது பாரம்பரியமான 43 கிராமங்களைச்சேர்ந்த நம்மக்களை வெளியேற்றுமாறு ஸ்ரீலங்கா அரசு நிர்ப்பந்தித்துள்ளது.

★ 15-04-88ல் 'இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு' வர்த்தமானிப் பத்திரிகையில் மணலாறு பிரதேசம் (வெலிஓயா) சிறப்பு பிரதேசமென அறிவிக்கப்பட்டு அதன் எல்லைகளை வரையறுத்துள்ளது.

★ சிறிலங்கா அரசு வரையறுத்துள்ள இவ் எல்லைப்பகுதிக்குள் அடங்கும் 75,000 ஏக்கர் நிலப்பரப்பினை அபகரிக்கும்வகையில் 43 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6000 குடும்பத்தினரை அவர்கள் வதிவிடங்களில் இருந்து வெளியேறும்படியும் அதற்குத் தேவையெனில் ஆயுதப் படையினரின் உதவியையும் பெறும்படியும் ஸ்ரீலங்கா அரசு உத்தரவிட்டுள்ளது.

★ ஆயுதப்படையினரின் அடாவடித்தனங்களினால் நன்கு செயற்பட்டுவந்த சுமார் 15க்கும் மேற்பட்ட மத்திய தரப் பண்ணைகள் (ஒவ்வொன்றும் 100 ஏக்குக்கும் மேலான நிலப்பரப்பை உடையவை) மூடப்பட்டு விட்டன.

★ வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களை ஊடறுத்து உருவாக்கப்படும் மகாவலி 'L' திட்டமானகளாக குறிப்பிடப்பட்டு வெலிஓயா நில அபகரிப்பு திட்டத்தின் 75,000ஏக்கர் நிலப்பரப்பும்அநுராதபுரமாவட்ட நிர்வாகத்துடன் இணைக்கவும் ஸ்ரீலங்கா அரசு முயற்சித்து வருகின்றது. இதன் அடிப்படையில் வெலிஓயாவை (மணலாறு) அநுராதபுரத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலை துரிதகதியில் அமைக்கப்பட்டு விட்டது.

★ சடல் எல்லையே இல்லாத அநுராதபுரத்தை முக்கிய நகரா கக் கொண்ட வடமத்திய மாகாணத்திற்கு இவ் வெலிஓயா (மணலாறு) திட்டத்தின் மூலம் திருகோணமலை, முல்லைத்தீவுக்கு இடைப்பட்ட நாயாற்று கடற்பகுதி எல்லையாக மாற்றப்பட்டுள்ளது.

இவ்வகை நில அபகரிக்கும் சதித்திட்டத்திற்கு, மகாவலி அபிவிருத்தித்திட்டம் என்பது போர்வையாக்கப்பட்டுள்ளது.

மாவலித்திட்டமென்பது இலங்கையில் மிகப்பெரிய ஆறான மகாவலி கங்கையில் பாயும் நீர் கடலில் கலந்து வீணாவதைத் தவிர்த்து நீரைத் தேக்கி நாட்டின் விவசாய - பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதாகும். இதன் அடிப்படையில் பெருமளவில் வெளிநாட்டுக்கடனுதவியும் பெறப்பட்டுள்ளது. 30 வருட காலத்தில் நிறைவேற்ற திட்டமிடப்பட்ட இத்திட்டத்தினை ஜே. ஆரின் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததும் தாம் ஆறு வருடத்தில் பூர்த்தி செய்வதாய் தம்பட்டம் அடித்தது; விளம்பரப்படுத்தியது

இத்திட்டத்தின் செயலாகவும் எதிர்காலம், செலவினம் என்பவை குறித்து நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களை கொண்டுள்ளனர். சந்தேசம் தெரிவித்துள்ளனர். மகாவலி அபிவிருத்தி திட்டத்தின்படி மகாவலி நீர் பாய்ச்சப்படும் பகுதிகள் A.B C. என பல்வேறு எழுத்துக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

துண்டிப்பு

இவ்வகையிலேயே ஆரம்பிக்கப்பட்ட B.C. திட்டங்களின் மூலம் மட்டக்களப்பு மாவட்டமும் திருகோணமலை மாவட்டமும் துண்டிக்கப்பட்டுள்ளன. மாதுறுஓயா திட்டம் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. இதேபோலத்தான் மகாவலி 'L' திட்டமென அழைக்கப்படும் வெலிஓயாத் திட்டமும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இணைப்பை இல்லாதொழிக்கின்றது.

மகாவலித்திட்டத்தின் பல தொடக்க வேலைகளே இன்னும் முடிக்கப்படவில்லை. வடக்குக்கு நீரை கொண்டுவர வேண்டிய N.C.P Canal என்னும் கால்வாய் இன்னமும் அமைக்கப்படவில்லை. அத்துடன் ''A''க்கும் ''L''க்கும் இடைப்பட்ட பல திட்டங்கள் இன்னும் தொடங்கப்படவே இல்லை.

இந்நிலையில் 'L' திட்டத்தை அமுலாக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் துடிப்பும் அவசரமும் அரசியல் உள்நோக்கம் உள்ளதென்பதை எமக்குத் தெளிவாக்குகின்றது; அத்தடன் ஸ்ரீலங்கா அரசின் சதி முயற்சியும் அம்பலமாகின்றது.

இலங்கை தமிழ்பேசும் மக்கள் தமது மொழியுரிமையை விடவும், நில ஆக்கிரமிப்பு சதி முயற்சிகளுக்கு எதிராக தம் தாயகத்தை பாதுகாக்கும் உணர்வுடனேயே போராட்ட எதிர்ப்பை கூர்மைப்படுத்தினர்.

இவ்வகையில் தான் 1957இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா-செல்வா உடன்படிக்கையில் குடியேற்றங்களை நிறுத்துதல் என்னும் அம்சம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையில் அல்லை-கந்தளாய் குடியேற்றங்கள் இனிமேல் மேற்கொள்வதில்லை எனவும் அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாகும் வகையில் அவ்வொப்பந்தம் கிழித்து எறியப்பட்டது வரலாறு ஆகும்.

ஆக்கிரமிப்பு வேலை

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டபோதும் அதில் குறிப்பிட்ட தமிழ் பேசும் மக்களினால் முன்வைக்கப்பட்ட விருப்பங்களைப் புறக்கணித்து ஸ்ரீலங்கா அரசு தனது விஸ்தரிப்புவாத நடவடிக்கையாக சில ஆக்கிரமிப்புவேலைகளை தொடர்ந்து செயற்படுத்தியது.

பின்னால் 1965 இல் மேற்கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் கூட குடியேற்றம் பற்றிய தமிழ் பேசும் மக்களின் விருப்பம் கொள்கையளவில் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் நடைமுறைப்படுத்தாத இந்த ஒப்பந்தமும் கூட தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

இந்த நிலைமையிலேயே பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு 30 ஆண்டுகளின் பின்னால் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் போது தமது இவ்அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் எனத் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்தனர்.

நில அபகரிப்பு தொடர்கிறது

இவ்வகையான நில அபகரிப்புக்களில் இருந்து பாதுகாப்புக் கிட்டுமென்றே தமிழ் பேசும் மக்கள் நம்பினர். அதனாலேயே பல குறைபாடுகள் இருந்த போதும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை வரவேற்கவும் செய்தனர்.

ஆனால் ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தி செய்த நிலையிலும் கூட ஸ்ரீலங்கா அரசு நில அபகரிப்பை மையமிட்டு தன்னிச்சையாக தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு எதிராக வெலிஓயாத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயலில் இறங்கியுள்ளது.

முன்னைய ஒப்பந்தங்களை [illegible] நிலைதான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கும் ஏற்பட்டு விடும் என்ற அச்சம் நியாயமானதே..

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினை பல்வேறு வகையில் மீறிவரும் ஸ்ரீலங்கா அரசு வெலிஓயாத்திட்டத்தின்மூலம் ஒப்பந்தத்துக்கு எதிராகவே செயற்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

துப்பாக்கி முனையில்

இவ் வெலிஓயாத் திட்டத்தை மேற்கொள்வதற்காக ஸ்ரீலங்கா அரசு பல காலமாகவே முயற்சித்து வந்துள்ளது.

இது நிறைவேற அனுமதிப்பது ஒப்பந்தம் மீது மேலும் நம்பிக்கை இழக்கச் செய்யும்

மேற்கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் கூட குடியேற்றம் பற்றிய தமிழ் பேசும் மக்களின் விருப்பம் கொள்கையளவில் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் நடைமுறைப்படுத்தாத இந்த ஒப்பந்தமும் கூட தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியது.

இந்த நிலைமையிலேயே பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு 30 ஆண்டுகளின் பின்னால் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் போது தமது இவ்அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் எனத் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்தனர்.

நில அபகரிப்பு தொடர்கிறது

இவ்வகையான நில அபகரிப்புக்களில் இருந்து பாதுகாப்புக் கிட்டுமென்றே தமிழ் பேசும் மக்கள் நம்பினர். அதனாலேயே பல குறைபாடுகள் இருந்த போதும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை வரவேற்கவும் செய்தனர்.

ஆனால் ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தி செய்த நிலையிலும் கூட ஸ்ரீலங்கா அரசு நில அபகரிப்பை மையமிட்டு தன்னிச்சையாக தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு எதிராக வெலிஓயாத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயலில் இறங்கியுள்ளது.

முன்னைய ஒப்பந்தங்களை [illegible] நிலைதான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கும் ஏற்பட்டு விடும் என்ற அச்சம் நியாயமானதே..

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினை பல்வேறு வகையில் மீறிவரும் ஸ்ரீலங்கா அரசு வெலிஓயாத்திட்டத்தின்மூலம் ஒப்பந்தத்துக்கு எதிராகவே செயற்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

துப்பாக்கி முனையில்

இவ் வெலிஓயாத் திட்டத்தை மேற்கொள்வதற்காக ஸ்ரீலங்கா அரசு பல காலமாகவே முயற்சித்து வந்துள்ளது.

1984 டிசம்பர் 24 ஆம் திகதி ஒலிபெருக்கி அறிவிப்பின் ஊடாகவே 24 மணி நேரத்துக்குள் இப்பகுதி கிராம வாசிகள் துப்பாக்கி முனையில் விரட்டப்பட்டனர். நாயாற்றுக்கு தென்பகுதியிலுள்ள கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, காயாட்டிக்குளம், கோட்டைக்கேணி போன்ற கிராமங்களில் வாழ்ந்தோரும் நாயாற்றுக்கு மேற்குப்பகுதியிலுள்ள நாயாறு, அளம்பில், செம்மலை, குமுளமுனை கிராமங்களில் வாழ்ந்தோரும் இராணுவ நிர்ப்பந்தத்தினால் விரட்டப்பட்டவர்களாவர்.

இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தென்னமரவாடிகிராமத்தில் வாழ்ந்தோரும் தூத்தி அடிக்கப்பட்டனர். அரசுவிரும்புவதுபோன்ற இராணுவக் குடியிருப்புக்களை நிறுவ முடியாமல் போனமை விடுதலை அமைப்புகள் தொடுத்த இராணுவத்தாக்குதலின் விளைவே ஆகும்.

ஊர்காவல் படையினர், மற்றும் பயிற்றப்பட்ட குண்டர்களை நவீன ஆயுத தளபாடங்களுடன் குடியமர்த்த எடுத்த முயற்சிகள் கூட முறியடிக்கப்பட்டன

தேர்தல் முயற்சி வேதனைக்குரியது

இத்தகைய முறியடிப்புக்களுக்கு காரணமான விடுதலை அமைப்புகளுடன் ஸ்ரீலங்கா அரசு திம்புவில் பேச்சுவார்த்தை நடத்தியபோது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த பாரம்பரிய பிரதேசமான எமது தாயகம் அங்கீகரிக்கப்படல்வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தனர்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையிலும் கூட இந்த அம்சம் ஏற்கப்பட்டிருந்தது.

தமிழ் பேசும் மக்களுக்கு இந்த ஒப்பந்தம் தரக்கூடிய நற்பயன்களில் ஒன்றாக தமது நிலத்தை பாதுகாக்கும் உத்தரவாதம் கிடைக்கும் என்றே நம்பினர்- ஆனால் ஒப்பந்தத்தை அமுலாக்க முனைந்துள்ள இந்திய அரசு ஆயுதக்களைவு என்ற அம்சத்தில் மட்டுமே தன்விடாப்பிடியான கவனத்தைக் கொண்டுள்ளது.

ஆனால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசானது [illegible] நடந்துவருவது மட்டுமல்லாமல் புதிய கோணங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான நடவடிக்கையிலும் துரிதமாக இயங்கிவருகிறது.

இவற்றைகட்டுப்படுத்தவும் கண்டிக்கவும் செய்யாத இந்திய அரசு இந்த மண்ணில் தேர்தலை நடத்த முயலுவது வேதனைக்குரியது.

1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை உடன்பாட்டினைத்தொடர்ந்து முல்லைத்தீவுக்கு வந்து இந்திய அமைதி காக்கும் படையினர் ஊடாக மக்கள் மீண்டும் தத்தமது இல்லங்களில் குடியேறும் முயற்சிகளை மேற்கொண்டனர். 25-8-85 அன்று தடைசெய்யப்பட்ட பிரதேசத்தினுள் அமைதிகாக்கும் படை அதிகாரிகளுடன் சென்றவர்கள் பாரிய (வெலிஓயா) அத்துமீறிய குடியேற்றம் இடம் பெற்றவருவதைச் சுட்டிக்காட்டினர். மேஜர் டாட்டா உட்பட வந்த அதிகாரிகள் 1500 க்கும் மேலான சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர்.

எதிர்ப்புப் போராட்டம்

முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியமான நிலப்பரப்பு அவர்களுக்கே தெரியாமல் அபகரிக்கப்பட்டதனைக் கண்டித்து 29-8-87 லும் அதன் பின்னரும் பல எதிர்ப்புப் போராட்டங்கள் நிகழ்த்தப்பட்டன.

அமைதிகாக்கும்படை அதிகாரிகளுக்கும் இந்திய தூதுவருக்கும் ஏன் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் கூடமகஜர்கள் மூலமாகவும் மற்றும் கலந்துரையாடல்கள் வாயிலாகவும் இத்திட்டத்தின் அபாயம் பற்றி மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது

ஆனால் இதனைக்கண்டு கொள்ளவோ தட்டிக் கேட்கவோ இந்திய அரசு முன்வராத நிலையில் ஸ்ரீலங்கா தன்னிச்சையான செயற்பாட்டில் வேகமாக ஈடுபட்டு வருகிறது.

எனவே தான் எமது மண்ணைப்பாதுகாக்கவும் ஸ்ரீலங்கா அரசின் சதித்தனமான சூழ்ச்சிகளை முறியடிக்கவும் நாம் அனைவரும் முன்வர வேண்டியது அவசியமாகிறது.

(இது ஈரோஸ் அமைப்பின் வெளியீடு)

பொது அறிவுப் போட்டி இல. 12

சரியான விடைகள்

(1) வேப்பம் இலை (2) வீனஸ் (3) எலும்பு (4) அவ்வுலகம் (5) நேருஜி (6) கோபம் (7) அனுமான் (8) அஜந்தா (9)காயத்திரி (10) உட்கார்ந்தார் (11) சிறிமாவோ பண்டாரநாயக்கா (12) அன்பு

ஒருவர் மட்டுமே சரியான விடைகளை அனுப்பியிருந்தார்.

முதலாம் பரிசு அவருக்கு வழங்கப்படுகிறது!

பெயர் வருமாறு:

மு. புனிதவதி
95, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

கொள்ளையரின் யுக்தி 3 ஆம் வீட்டில் பலிக்கவில்லை

பண்டத்தரிப்பு செப் 19

இரவு நேரங்களில் வீடுகளில் திருடுவதற்குக் கொள்ளைக் கோஷ்டியினர் ஒரு புதிய யுக்தியைக் கையாளுகின்றனர்.

தாம் கொள்ளையடிக்க திட்டமிட்ட வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டுக்காரரை அழைத்து அவரின் அயலவரைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் செய்கின்றனர்.

கதவு திறக்கப்பட்டதும் கொள்ளையர்கள் திடீரென அவ்வீட்டுக்குள் நுழைந்து விடுகின்றனர்.

இது போன்ற சம்பவங்கள் தெல்லிப்பளையிலுள்ள மாத்தளை என்ற குறிச்சியில் இரு வீடுகளில் நடைபெற்றுள்ளன.

முதலாவது வீட்டுக்குள் ஆயுதங்களுடன் உட்புகுந்த ஒரு கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்தவர்களை அவர்களது படுக்கை அறைக்குள் போகும்படி கட்டளையிட்டு ஒருவரைக் காவலுக்கு வைத்தனர்.

பின்பு அவ்வீட்டிலிருந்த மூன்று யுவதிகளின் நகைகளையும் ரூபா பத்தாயிரத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் அவ்வீட்டார் அலித்து வைத்திருந்த இடியப்பத்துக்கு ருசியாக அங்கிருந்த முட்டைகளையும் பொரித்துச் சாப்பிட்டுள்ளனர்.

அதன் பின் அவ்வீட்டுப் பெண்ணை அழைத்துச் சென்று அடுத்த வீட்டுப் பெண்ணின் பெயரைச் சொல்லி அழைக்கச் செய்தனர்.

அப்பெண் கதவைத் திறந்ததும் அவ்வீட்டிலிருந்த அனைவரையும் நடு ஹோலில் இருத்தி ஒருவரைக் காவலுக்கு வைத்தனர்.

அவ்வீட்டிலிருந்த நகைகளும் ரூபா 20 ஆயிரமும் கொள்ளையடிக்கப்பட்டன.

இக்கோஷ்டியினர் அவ் வீட்டின் பின் புறத்தால் மூன்றாவது வீட்டுக்குச் சென்ற பொழுது இவர்களின் தந்தரம் பலிக்கவில்லை.

அவ்வீட்டுக்காரர் கதவை திறக்க மறுத்ததுடன் கதவைத் திறக்கும்படி கேட்ட பெண்ணைப் பார்த்து ''இப்பொழுது இரவு 11 மணி. நீ ஏன் இங்கு வந்தாய். உன் கணவனை அனுப்பு'' என உரத்த குரலில் ஏசினராம்.

இவரின் குரலைக் கேட்ட அயல் வீட்டுக்காரர் லையிற்றைப் போட்டு சத்தம் போட கொள்ளைக் கோஷ்டியினர் ஓடி விட்டனர். (ச - 120)

பூஸாவிலிருந்து மேலும் சுமார் 300பேர் செவ்வாயன்றுவிடுதலை

யாழ்ப்பாணம், செப். 19

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் மேலும் 230 முதல் 300 பேர்வரை அடுத்த செவ்வாய்க் கிழமை காலையில் விடுதலை செய்யப்படுவார்கள்.

-இத்தகவலை இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் சனிக்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

விடுதலை செய்யப்படவிருக்கும் இந்த இளைஞர்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் இடம்பெறமாட்டார்கள் என்றும் அவர் சொன்னார். (அ-உ-10)

நெடுந்தீவில் டொல்பின் மீன்

சுமார் ஏழு அடி நீளமான ''டொல்பின்'' மீன் ஒன்று இறந்த நிலையில் நெடுந்தீவு மேற்குப் பெரியதுறைக்கடற்கரையில் ஒதுங்கியது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இதனைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

"தமிழ்ப் பகுதிகளில் கல்வி அபிவிருத்தி கருதி இப் பதவியை ஏற்றேன்"

வரவேற்பு உபசார விழாவில் கல்விப் பணிப்பாளர்உரை

பருத்தித்துறை,செப்19

தமிழ்மக்களின் கல்விக்குச்சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தபோது வெளிநாடுகளில் கல்விப் பகுதிக்குச் செல்லக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இவற்றில் இரண்டையும்சீர்தூக்கிப் பார்த்து—தமிழ்ப் பகுதிகளின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இப்பதவியை ஏற்றேன். இங்குபல்வேறு கஷ்டங்களின் மத்தியில் மனத்திருப்தியுடன் கல்விச் சேவை செய்துவருகின்றேன்.

யாழ்.மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற திரு. வெற்றிவேலு சபாநாயகம் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அபிவிருத்திச் சபையினரால் தமக்கு அளிக்கப்பட்டஉபசார விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

விழா வித்தியாலய அதிபர்திரு.செ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் திரு.வெ. சபாநாயகம் மேலும்பேசியதாவது:-

தமிழ்மக்களின்முக்கிய முதலீடு கல்வி ஆகும். தமிழர்களின் பொக்கிஷமும் கல்விதான்.

அக்கல்வியை ஊட்டும் ஆசிரியர்கள் பயிற்சி முடிந்ததும், கல்வி கற்பதுமுடிந்துவிட்டது என எண்ணாது தொடர்ந்து கற்க வேண்டும். புதிய விடய தானங்களை மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

இன்றைய மாணவர், நாளைய, வருங்கால சமுதாயச் சிற்பிகள். இன்றைய மாணவர் சமுதாயத்தை நற்பிரஜையாக்கும், உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடமே விடப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் நீண்டகாலத்தேவைகளை விரைவில் பூர்த்திசெய்வேன். அடிப்படைத் தேவையான குழாய்க் கிணற்றையும், மற்றும் பூர்த்தியாகாமல் நீண்டகாலமாகவுள்ள கட்டடத்தையும் உடனடியாக நிறுவுவதற்கு ''ரெட்பானா'' நிறுவனத்தின் மூலம் சுமார் ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளேன்.

இப்பாடசாலையின் நீண்டகாலக் கோரிக்கையின் பெயரில்நான்கு ஆசிரியர்களை வழங்கியுள்ளேன்'' இப்படிஅவர்கூறினார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் பேசுகையில், ''நெருக்கடியான கால கட்டத்தில் வடமாநிலம் ஒரு சிறந்த கல்வி நிர்வாகஸ்தரின் சேவையைப்பெற்றது ஒரு பாக்கியமாகும்'' என்றார்.

பருத்தித்துறைக் கொத்தணி அதிபர், திரு.சி. பொ. பாலசிங்கம் பேசுகையில் ''திரு.வெ. சபாநாயகம்கல்விப்பணிப்பாளர்மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த கல்வி அபிவிருத்தியாளன்'' என்றார்.

கல்வி அதிகாரி திரு. எஸ்.சண்முகநாதன்பேசுகையில், கல்வியில்உச்சப் பயன் அடைய வேண்டுமானால் கல்வியில்விருப்பம்உடையனாகவும், ஆற்றல் உடையவனாகவும். அனுபவம் உடையவனாகவும், அமைதல் வேண்டும். இவை அனைத்தும் நிரம்பியவராகதிரு. வெ. சபாநாயகம் விளங்குகின்றார் என்றார்.

வடமராட்சிக் கோட்டக்கல்விஅதிகாரிசெல்வி தி.பெரியதம்பி பேசுகையில்,''இன்றைய வேலையில்லாப் பிரச்சினையைப் போக்கத் தொழில்நுட்பக் கல்வி இன்றியமையாதது.அதனைக்கருத்திற் கொண்டு வடமராட்சிப் பகுதியிலுள்ள கல்லூரிகளில் தொழிற்கூடங்கள் அமைத்து எதிர்காலச் சந்ததியினருக்குத் தொழிற் கல்வியின் அவசியத்தைத் தெரியப்படுத்தவேண்டும். இதற்குக் கல்விப்பணிப்பாளர் உதவவேண்டும் என்றார்.

திரு.ஏ.வி.தங்கராசா, திரு.க.கணபதிப்பிள்ளை, திரு.எஸ். குமாரசாமி, திரு.ஏ.கே. மாணிக்கம், திரு. எஸ். சரவணமுத்து, உட்படப்பலரும் உரையாற்றினர்.

இறுதியாகப் பாடசாலை அபிவிருத்திச்சபைச்செயலாளர் திரு.எஸ்.ஞானச்சந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார். (இ-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் ஈரோஸ் தொண்டர் கைது

திருமலை செப் –19

இந்தியப் படையினர் வித்தியாலயம் வீதியில் அமைந்துள்ள ஈரோஸ் அலுவலகத்திற்குள் திடீரெனப் புகுந்து அங்கிருந்த 15 ஈரோஸ் தொண்டர்களைக் கைது செய்தனர். (ச–150)

வாழ்க்கையை துறந்து சேவை புரியும் மனப்பான்மை அருகிவிட்டது

சுவாமி சம்பிரக்ஞானந்தர் உரை

கொழும்பு, செப்.19

''வாழ்க்கையைத் துறந்து சேவை புரியும் மனப்பான்மை இந்துக்களிடையே அருகிவிட்டது. மற்றைய மதங்களில் ஒரு குடும்பத்தில் ஒருவர் துறவு பூணுவது கட்டாயமாகக் கருதப்படுகிறது. துறவு வாழ்க்கை ஆசிரியர்கள் மாணவர்களிடையே புகுத்தினால் இந்துசமயத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரமுடியும்.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி நடத்திய இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் தலைமை உரையாற்றுகையில் சுவாமி சம்பிரக்ஞானந்தர் மேற்கண்டவாறு கூறினார்.

சுவாமிசித்ருபானந்தா உரையாற்றுகையில் நாம் சுவாமி விவேகானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்களுக்குச் சேவை செய்ய இந்து மதம் தானாகவே புத்துயிர் ஊட்டப்படும்.

வீண் தாக்கங்களால் இந்து சமயத்தில் எழுச்சியை உண்டாக்க முடியாது'' எனக் கூறினார்.

ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய பாதையில் கடைப்பிடிக்க சமயாசாரங்களை ஆசிரியர்தாமும் நடைமுறைப்படுத்தி மாணவரையும் அவ்வழியில் வாழத் தூண்டுதல் வேண்டும் என்ற கருத்து ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமிதிச் செயலாளர் திருமதி பூமணி குலசிங்கம் நன்றியுரையாற்றினார். (ச)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான

பிரவேசப் பரீட்சை - 1989

1. இப்பரீட்சை 22-10-1988 சனிக்கிழமை நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்விகற்கும் மாணவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
3. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கட்டணமாக ரூபா பத்து செலுத்திக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் அதிபர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 10 க்கான காசுக் கட்டளை/அஞ்சற் கட்டளையையும் தமது சுய முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்படாத 9''x4'' அளவான கடித உறையினையும் அனுப்பி விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 7-10-1988 வெள்ளிக்கிழமைக்கு முன் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். 7-10-88ந் திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
5. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
6. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரம் 15-10-1988க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பெற்றார்/பாதுகாவலருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

அ. இராஜரட்ணம்,
அதிபர்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம் (C/235)

வவுனிக்குளத்தில் மூடிக்கிடக்கும் பாடசாலை

மாங்குளம், செப்.19

வவுனிக்குளம் 6 ஆம் கட்டைப் பாடசாலை சென்ற மாதம் 5 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி மீன்பிடி அதிகாரி, மாங்குளம் பங்குத்தந்தை அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் ஆகியோரின் பெரும் முயற்சியால் இப்பிள்ளைகள் கல்வி பயில ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது.

பின்பு இப்பாடசாலையை மீன்பிடி அமைச்சு பொறுப்பேற்றது.

பாடசாலை இப்பொழுது ஆசிரியர்களின்றி மூடிய நிலையில் உள்ளது.

இதுபோன்ற பாடசாலைகளைத் தென்பகுதியில் மீன்பிடி அமைச்சு நிதி வழங்கி ஆதரித்து வருகிறது

இப்பாடசாலையை அவர்கள் புறக்கணிப்பது ஏனோவென இப்பகுதி மக்கள் ''உதயனுக்கு'' முறையிட்டுள்ளனர். (ச–94)

யுத்த நிறுத்தத்துக்கு வரவேற்பு

இடைக்கால நிர்வாகசபை ஒன்றின் கீழேயே தேர்தல்

ந. ச. ச. க. அறிக்கை

கொழும்பு, செப். 19

இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைத்து அதன் கீழேயே வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

—இவ்வாறு நவசமசமாஜக்கட்சி யுத்த நிறுத்தத்தை வரவேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

இந்திய அமைதிப் படையினர் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். இதை எப்பொழுதோ அவர்கள் மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். அதன் மூலம் எவ்வளவோ அழிவுகளைத் தவிர்த்திருக்கலாம்.

விடுதலை இயக்கங்களும், வெகுஜன அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் இதைத்தான் வலியுறுத்தின. காலம் கடந்தாவது இம்முடிவை மேற்கொண்டது மகிழ்ச்சிக்குரியதாகும்

மாகாணசபைத் தேர்தலை விடுதலை இயக்கங்கள், வெகுஜன அமைப்புகள், அரசியல் கட்சிகள் அனைத்தும் பங்கு பற்றி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் இடைக்கால நிர்வாகத்தின் கீழேயே நடத்தவேண்டும்.

தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளாத, பங்குபற்றாத எந்த ஒரு தேர்தலும் அமைதியையும் சமாதானத்தையும் நிச்சயமாக உருவாக்காது. திலீபன் தனது உயிரைத் தியாகம் செய்ததும் இதற்காகத்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இலங்கை, இந்திய அரசுகள் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கும் நல்லெண்ணத்துடன் செயல்படுகின்றன என்பதை இச் சந்தர்ப்பத்தில் நிரூபிக்க வேண்டுமென்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ஒ 3)

கொடிகாமம் மீசாலையில்

தமிழர் நலனுக்காக உண்ணாவிரதமிருந்து வீரமரணம் அடைந்த திலீபனின் நினைவுதினம் கொடிகாமத்திலும் மீசாலையிலும் சோக இசையுடன் அனுஷ்டிக்கப்படுகின்றன.

பந்தல்களில் திலீபனின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பூநகரியில் திலீபனுக்காக பூசை, வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.19

தியாகதிலீபனை நினைவு கூர்ந்து, இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை பூநகரி வாடியடியில் அமைந்துள்ள முனியப்பர்கோயிலில் விசேட பூசையும், வழிபாடும் இடம்பெற உள்ளன.

இதேவேளையில் கடந்த 15 ஆம் திகதி முதல் பூநகரிப் பகுதிஎங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுச் சோகதீபங்கள் ஒளித்த வண்ணம் உள்ளது.

வழக்கறிஞர் கடத்தப்பட்டார்!

கடந்த 15 ஆம் திகதி வழக்கறிஞர் ஒருவர் வல்வெட்டியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

கு. சுந்தரலிங்கம் என்பவரான அவர் வல்வெட்டியில் ஒரு திருமண வைபவம் ஒன்றிற்குச் சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வரும் போதே இனந்தெரியாத சிலரால் கடத்தப்பட்டார். (ஒ-சி-160)

தான் கோண்ட இலட்சியத்துக்காக அண்ணல் காந்தி அடியோற்றி தன்னுயிர் ஈந்த

தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் தமிழீழம் மலரட்டும்"-
தலைப்பு மாணவ பத்திரிகையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.
-தமிழீழ மக்கள் சார்பில்

Harvard Institute
SUCCESSORS OF
Cantabia Institute

அன்று CANTABIA ! இன்று HARVARD !!

ஆம், பெயர்மாறினாலும் இடம் மாறாத, சேவை குன்றாத, கணக்கியல், கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்.

ஆரம்பமாகின்றன கோம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்
25ஆம், 26ஆம் திகதி புதிய பிரிவுகள்

Diploma in Computer Programming
and
Data Processing
Basic Language - 6 Months Course

வார நாட்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும்
இரு தனித் தனிப் பிரிவுகள்
தகைமையும், திறமையும், ஆற்றலும், அனுபவமும் மிக வாய்ந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்கள்,

ஆரம்பம்:
வார நாள் வகுப்புகள்: 21-09-1988
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு வகுப்புகள்: 24-09-1988
சனி காலை 10.00 மணி
கட்டணம்: ரூபா 1500/-
(மூன்று தவணைகளில் செலுத்தலாம்)

மேலதிக விபரங்களுக்கு.
HARVARD INSTITUTE
(SISTER ORGANIZATION OF OXONIA, COLOMBO.)
&
(PIONEER IN COMPUTER EDUCATION)
No. 21, MAIN STREET,
JAFFNA.
(2ஆம் குறுக்குத் தெரு வழியாக வரவேண்டும்.)
(C 229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

உலைவிடத்து ஊறஞ்சா வண்கண்
தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது.

பொருள்:

போரில் அழிவு வந்தவிடத்தில் வலிமை குன்றினாலும் இடையூறுகளுக்கு அஞ்சாத அஞ்சாமை தொன்று தொட்டுப் பெருமை உடைய படைக்கு அல்லாமல் முடியாது.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இல:– 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
19–09–1988 த. பெ. இல 23

விடுதலைகள் இங்கும் வேண்டும்

இந்திய அமைதிப் படையினர் கைது செய்த மூன்று பொதுமக்களை — சமூகத்திற்கு முக்கிய தொண்டாற்றும் பணிகளைச் செய்யும் பிரசைகளை — டாக்டர், ஆசிரியர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகிய மூவரையும்— விடுதலை செய்யுமாறு கோரி பெரும் எண்ணிக்கையான மக்கள் வடமராட்சிப் பகுதியில் ஊர்வலம் ஒன்றை நடத்தி இருக்கிறார்கள். அல்வாயிலிருந்து புலோலி அமைதிப் படை முகாம்வரை மக்கள் ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். அந்த மூவரும் பின்னர் விடுவிக்கப்பட்டதாக அறியவந்தது.

பூஸாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் 115 பேர் விடுவிக்கப்பட்டு விட்டனர். நீண்டகாலச் சிறை வாழ்வை முடித்துக் கொண்டு சுதந்திர மனிதர்களாக அவர்கள் வெளியே வந்திருக்கின்றார்கள்.

மேலும் 300 பேர் வரையில் பூஸாவிலிருந்து நாளை விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள்.

இந்த விடுதலைச் செய்திகள் வெளிவந்திருக்கும் வேளை, கைது செய்யப்பட்டு வடக்கில் உள்ள இந்தியப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று பிரசைகளை விடுதலை செய்யக்கோரி மக்கள் ஊர்வலம் சென்ற செய்தியும் வெளிவந்திருப்பது எல்லோரது சிந்தனையையும் தூண்டவே செய்யும்.

வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் கடந்த அக்டோபருக்குப் பின்னர் அமைதிப் படையினர் காரணம் கூறாமல் மக்களைக் கைது செய்து வருகின்றனர். விசாரணையின் பின்னர் பலரை விடுவிக்கிறார்கள். வேறுபலர் தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

ஸ்ரீலங்காப் படையினர், தாம் கைது செய்தவர்களை விசாரித்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப் போவதாகக் கூறிக்கொண்டு, அந்த இரண்டில் எதுவுமே செய்யாமல் ஆயிரக் கணக்கானஅப்பாவித் தமிழர்களைச் சிறையில் பூட்டி வைத்திருந்தனர்.

இந்திய அமைதிப் படையினர் எந்தச் சட்டத்தின் கீழ் சந்தேகத்துக்கு உரியவர்கள் எனக் கருதப்படுவோரைக் கைது செய்கிறார்கள் என்பது குறித்துப் பகிரங்கமான அறிவிப்பு எதுவும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பை இலங்கை ஜனாதிபதி அமைதிப் படையிடம் கையளித்தார் என்ற வகையில்—

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட இடைஞ்சலாக இருப்போரை, இடைஞ்சலாக இருப்பவர்களாகச் சந்தேகிக்கப்படுவோரைத் தாம் கைது செய்து வருவதாக அமைதிப் படையினர் நியாயம் கற்பிக்கலாம்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தெரிவித்தது போல, கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர அமைதிப்படைக்குத் திட்டம் உண்டா என்பது தெரியவில்லை. அது சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவிப்பும், தகவலும் இல்லை. அதற்கான சட்ட அதிகாரம் உண்டா என்பதும் தெளிவாக்கப்படவில்லை.

ஆகையால், அமைதிப்படையினர் தாம் சந்தேகத்தின் பேரில் கைது செய்வோரை நீண்ட காலம் காவலில் வைத்திருக்கவேண்டிய நிலை என்றே கருத இடமுண்டு.

சந்தேகம் இருந்து கைது செய்தால் விசாரித்து விட்டு, விசாரணைப் பதிவை வைத்துக் கொண்டு சம்பந்தப்பட்டவர்களை விடுவித்து விடலாம் அல்லவா? சட்டத்தையும் ஒழுங்கையும் குலைப்பதற்கு ஒருவர் முயன்றார் என்பதற்குப் போதிய ஆதாரம் இருந்தால், வழக்கறிஞர் அல்லது பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் அவரது நிலைமையை எழுத்து மூலம் கொடுத்து, தடுத்து வைத்திருப்பதை நியாயப்படுத்தலாம் அல்லவா? இந்த இரண்டில் ஒன்றுமே இல்லாமல் பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்த விதத்திலும் பொருந்தாது.

மொத்தத்தில் தென்னிலங்கைச் சிறைகளில் இருந்து தமிழ்க் கைதிகள் விடுதலையாகும் போது, தமிழ்ப் பகுதிகளில் உள்ள கைதிகளையும் மன்னித்து விடுவித்தால் என்ன என்ற கேள்வி தானாகவே எவர் மனதிலும் எழுவதைத் தவிர்க்க அல்லது தடுக்க இயலாது.

இதனை இந்திய அமைதிப் படையினர் கவனத்தில் எடுத்து சாதகமான விதத்தில் நடந்துகொள்ள வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஊர்வலம் நடத்தினால்தான் விடுதலை என்ற நிலை இல்லாமல் முறைப்படி விடுதலை என்ற நிலை வர வேண்டும் என விரும்புகிறார்கள்.

3 மாத கால இடைவெளியில்

ஹெய்தி தீவில் மீண்டும் ராணுவப்புரட்சி

ஜனாதிபதி நம்பி கைதுசெய்யப்பட்டார்!!

ஹெய்தி, செப். 18

ஹெய்தி ஜனாதிபதி ஜெனரல் நம்பி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

இராணுவப் புரட்சி ஒன்றில் இவர் சனிக்கிழமை பதவி கவிழ்க்கப்பட்டார்.

ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி வளைத்த ஜெனரல் நம்பிக்கு எதிரான இராணுவப் பிரிவு, பலத்த மோதலின் பின்னர், ஜெனரல் நம்பியை கைது செய்தனர்.

சிவில் ஜனாதிபதியாகப் பணிபுரிந்த திரு. லெஸ்லி மனிகற்றை கடந்த ஜூன் 19 இல் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் கவிழ்த்து இராணுவ ஆட்சி ஒன்றை ஜெனரல் நம்பி ஏற்படுத்தினார்.

பதவி கவிழ்க்கப்பட்ட திரு. மனிகற்றை நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டார்.

மூன்று மாதங்களே இராணுவ ஆட்சியின் ஜனாதிபதியாக ஜெனரல் நம்பி பணிபுரிந்தார்.

இராணுவ உயர் மட்டத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளைத் தொடர்ந்து ஜெனரல் நம்பியை இராணுவத்தின் ஒரு பிரிவு நேற்று கைது செய்து விமானத் தளத்திற்கு கொண்டு சென்றது அவருக்குள்ள நடந்தது என்பது தெரியவில்லை.

புதிய இராணுவ ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவது பற்றி சிரேஷ்ட இராணுவத் தலைவர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

கைதான ஜனாதிபதி நம்பியை, டொமினிக்கன் குடியரசுக்குச் செல்ல ஹெய்தியின் புதிய ஆட்சியாளர்கள் அனுமதித்திருப்பதாக பி.பி.சி. தெரிவித்தது.

பர்மாவில் கிளர்ச்சி தீவிரமடைகிறது; அரசுப் பணிகள் தொடர்ந்து ஸ்தம்பிதம்

ரங்கூன், செப் 18

பர்மாவில் தேர்தலுக்கு முன்னர் இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும் என்று கோரி நடத்தப்பட்டு வரும் கிளர்ச்சிகள் தீவிரமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆளும் சோஷலிச புரோகிராம் கட்சி கலைக்கப்பட வேண்டும் என்பதும் அரசு எதிர்ப்புக் குழுக்களின் இன்னொரு கோரிக்கையாகும்.

இவற்றை வலியுறுத்தி ரங்கூனில் கடந்த சனிக்கிழமையும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. லட்சக் கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்,

பாதுகாப்புப் படையினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சேதவிவரம் வெளியாகவில்லை.

வர்த்தக அமைச்சுக் கட்டடத்தை மக்கள் முற்றுகையிட்டனர். இராணுவத்தினர் சிலரை சுற்றி வளைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குழு, அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தது.

'இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அரசுப் பணியாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் இல்லையேல் வேலையில் இருந்து நீக்கப்படுவீர்கள்'—இப்படி அரசு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இதே வேளை—

கடந்த இரண்டு மாதங்களாக அரச ஊழியர் வேலை நிறுத்தஞ் செய்து வருவதால் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை

வெளி நாடுகளின் தூதர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கள் குடும்பங்களை ரங்கூனில் இருந்து சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி விட்டனர். (எ)

பர்மா கிளர்ச்சியை நடத்தும் ஐவர்

ரங்கூன், செப். 18

பர்மாவில் தற்சமயம் இடம்பெறும் கிளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஐந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

அவை பின்வருமாறு;

★ ஊநூ, வயது 82. 1962 வரை பிரதமராக இருந்தவர். ஜெனரல் நீவின் நடத்திய புரட்சியின்போது பதவி இழந்தார்.

★ போ ஜா நயிஸ், வயது 72. சுதந்திரப் போராட்டத்தை நடத்திய 30பேரில் இன்று உயிருடன் இருப்பவர் இவரே. பர்மாவின் இராணுவத்தை ஸ்தாபித்தவர்.

★ ஔங் கீ, வயது 70. ஜெனரல் நீவின் வின் வலதுகரமாக விளங்கியவர். 1962 புரட்சியின் போது ஜெனரல் நீவினுக்கு உதவியவர்.

★ ரின் ஔ, வயது 62. முன்னாள் பாதுகாப்பு அமைச்சர். 1976இல் நீவின்னால் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

★ அவுங் சான் சூ கியி வயது 43. ஒக்ஸ்போட் பட்டதாரி. 22 வயதில் பர்மாவை விட்டு வெளியேறினார். பர்மாவின் சுதந்திரத்துக்குப் பாடுபட்ட ஊதாண்டின் மகள் இவர். (எ)

மெக்ஸிக்கோ நகரில் பெரு வெள்ளம்; 550பேரைக் காணவில்லை எனத் தகவல்

மெக்ஸிக்கோ நகரில் ஆறு கரை புரண்டு ஓடியதில் 550 பேர்கள் வரையில் காணாமற் போய்விட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பெருமழையும் புயலும் ஏற்பட்டதைத் தொடர்ந்து நகரின் ஊடாகச் செல்லும் ஆற்றின் அணை உடைந்து வெள்ளம் நகரினுள் புகுந்தது அப்போது பஸ்கள், கார்கள் அடித்துச் செல்லப்பட்டன.

அப்போது பலர்வெள்ளத்தில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (எ)

பறவை மோதி விமானம் சேதம்

பறவை ஒன்றின் மீது மோதியதால் இந்திய விமானம் ஒன்று மதுரையில் தரை இறக்கப்பட்டது.

விமானத்தின் என்ஜின் இதனால் சேதமடைந்தது. பயணிகளுக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை.

அடுத்தடுத்து ஏழு தடவைகள் பறவைகள் இந்திய விமானங்களுடன் மோதிய சம்பவங்கள் இந்த ஆண்டில் நிழ்ந்துள்ளன (எ)

காஸாவில் இரண்டு பலஸ்தீனியர் பலி

ஜெருசலம் செப் 18

ஆக்கிரமிப்பிற்குட்பட்ட அரபுப் பிரதேசத்தில் நடந்து வரும் கிளர்ச்சியில் நேற்று இரண்டு பலஸ்தீனிய இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

வெளி உலகில்

விபத்தில் 7 பேர் பலி!

சென்னை, செப் 18

சென்னை அருகே முத்துக்காட்டில் லொறி—வான் மோதலில் ஏழு திமுக தொண்டர்கள் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர். (ஓ-எ)

ஆசிய - பசுபிக் அமைதிக்கு சோவியத் தலைவரின் திட்டம்

மாஸ்கோ, செப். 18

ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் அமைதி நிலவ சோவியத் தலைவர் மிக்கைல் கோர்ப்பச்சேவ் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறார்.

சைபீரியாவில் ஐந்து நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் கோர்ப்பச்சேவ் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இத்திட்டத்தை வெளியிட்டார்.

அமெரிக்கா, பிலிப்பீன்ஸில் உள்ள தனது கடற்படைத்தளத்தை அகற்றினால் வியட்னாமில் இருந்து தனது கடற்படைத் தளத்தை அகற்றப் போவதாக இத்திட்டத்தில் தலைவர் கோர்ப்பச்சேவ் வெளியிட்டிருக்கின்றார். (எ)

முள்ளிக்குளத்தில் யுத்தநிறுத்த மீறல் எனப் புளொட் குற்றச்சாட்டு

வவுனியா, செப் 19

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த அடுத்த நாளான வெள்ளியன்று அதிகாலைமன்னார்மாவட்டம், முள்ளிக்குளத்தில் உள்ள புளொட் இயக்கத்தின் முகாமைச்சுற்றி வளைத்த இந்தியஅமைதிப்படையினர் தாக்குதல் நடத்தியதாகஅதன் பேச்சாளர் ஒருவர் குற்றம்சாட்டினார்.

அதன் மூலம் இந்திய அமைதிப் படையினரே அறிவித்த யுத்த நிறுத்தத்தை அவர்களே மீறி உள்ளதாகஅவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின்போது தமது தரப்பினரும் எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டதாகவும், சேதவிவரங்கள் குறித்து எதுவும் தெரியவில்லை எனவும் அவர் கூறினார்.

இதனிடையில் வவுனியாவுக்குக்கிடைத்த செய்திகளின்படி, முள்ளிக்குளம் பகுதியில் பெரும் எண்ணிக்கையான படையினர் சுற்றி வளைத்துத் தாக்குதல், தேடுதல்களில் ஈடுபட்டிருந்ததாகவும், வெள்ளிக்கிழமை மாலைவரை பாரியகுண்டு வெடிப்பு, வெடிச்சத்தங்களும்கேட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஓ-164)

சாட்டிசிந்தாத்திரை அன்னை திருவிழா

சாட்டி சிந்தாத்திரை அன்னை ஆலய திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி காலை 6-00 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 7-00 மணிக்கு இரண்டாம் திருப்பலியுமாக நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாண ஆயர் திருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார். 23ஆம் திகதி மாலை 5-00மணிக்கு நற்கருணை நாள் நடைபெறவிருக்கின்றது. (ஓ)

விநாயகர் சதுர்த்தி

கொழுமாமம், செப் 19

மிருசுவில் குருக்கள் மாவடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆவணி விநாயகர் சதுர்த்தி கடந்த வியாழக்கிழமை பக்திப்பரவசமாக கொண்டாடப்பட்டது.

அடியார்கள் விநாயகர் அகவல் திருமுறைகள் ஓத சுவாமி வீதி உலா வந்தார்.

[illegible] கூட்டுப் பூஜைகள் [illegible] நடைபெற்றது.

அமைதிப் படையினரும் கறுப்புப்பட்டி

புதுக்குடியிருப்பு,செப்.19

புதுக்குடியிருப்பில் அன்னையர் முன்னணியினால் வழங்கப்பட்ட கறுப்புப்பட்டிகளை அமைதிப்படையினரும் வாங்கி அணிந்துகொண்டனர்.

5 நாள் யுத்த நிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டதை அடுத்து புதுக்குடியிருப்பு அன்னையர் முன்னணியினர், பிரசைகள் குழுவினர் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள்கலந்துரையாடல் ஒன்றுக்காக அமைதிப்படை முகாமுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அப்பொழுதே திலீபனின் நினைவு தினத்தை ஒட்டிய கறுப்புப் பட்டிகளை படையினரிடம் அன்னையர் முன்னணியினர் விநியோகித்தனர். (இ-126)

அமைதியும், வழமையும் திரும்பாதவரை

வடக்கு, கிழக்கில் தேர்தலை நடத்த சிந்திப்பது கேலிக்கூத்தானதாகும்

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தற்போது நிலவும் சூழ்நிலை மாறி அங்கு அமைதியான நிலை ஏற்படும் வரை அப்பகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கு சிந்திப்பதோ அல்லது தேர்தலைநடத்த முற்படுவதோ கேலிக்கூத்தான நடவடிக்கை ஆகும்.

முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் பிரதித் தலைவர் ஜனாப் எம் சி. அகமட் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தற்போதைய அரசின் நடவடிக்கை சிறுபான்மை மக்களை அழித்தொழிக்கும் செயலாகவே உள்ளது.

தேர்தல் பற்றிய அரசின் அறிவிப்பு இதனை உண்மைப்படுத்துவதாகவே அமைகிறது.

கிழக்கிலங்கையைப் பொறுத்த வரையில் அங்கு நிலவுகின்ற யதார்த்த நிலைமையினை அரசு அறிந்திருந்தும் அரசு மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் திருப்தியானதாக இல்லை.

இப்பிரதேசத்தில் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் ஏறக்குறைய சம அளவாக இருக்கின்ற சூழ்நிலையில் அரசின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றமானது, பேரினவாதத்தின் அத்துமீறிய குடியேற்றக் கொள்கையையேதுலாம் பரமாக எடுத்துக்காட்டுகிறது இதனை இனவாதத்தின் மிகக்கூடிய நிலை ஆக்கிரமிப்பாகவே நாம் கொள்கிறோம்.

'புண்ணிய பூமி'-என்ற போர்வையில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான நிலங்களும், தீவாப்பிப் பிரதேசங்களும் இந்த அரசினால் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லீம்களிடமிருந்து படிப்படியாக அபகரிக்கப்பட்டு வருகின்றன. இது இந்த அரசின் பயங்கரமான நில அபகரிப்பு நடவடிக்கை என்பதில் சந்தேகம் இல்லை.

எது எவ்வாறு இருப்பினும்–இன்றைய வடக்கு, கிழக்கில் நிலவும் பயங்கரமான சூழ்நிலைகளை கொஞ்சமும் எண்ணிப் பார்க்காது தனது அரசியல் லாபத்தையும்— அடக்கு முறைக்கொள்கையையும் மனதில் கொண்டு அரசு செயல்பட முனைவது இப்பகுதிகளில் அதனுடைய கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்க முற்படுகின்ற ஒரு விஷப் பரீட்சையாகும். எனக் கூறப்பட்டுள்ளது. (ஓ-10)

நேர்முகப் பரீட்சை

பருத்தித்துறை செப் 19

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் சம்பியூட்டர் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்த சகல மாணவர்களையும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு. என் மகாதேவன் அறிவித்துள்ளார். (ஓ 118)

சிறப்பாக நடந்தது

காங்கேசன்துறை, செப் 19

தெல்லிப்பளை கிழக்கு ஸ்ரீ காளியம்பாள் கோயிலில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து 22 தினங்கள் [illegible] நடைபெறும். (ஓ 68)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.19

உடுவில் நற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழா முன்னர் அறிவித்த படி நேற்று நடைபெறவில்லை.

தவிர்க்க முடியாத காரணங்களினால் இவ் விழா ஒத்திவைக்கப்பட்டதாக இந்நிலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (ஓ-சி)

பளையில் கடையை உடைத்துக் கொள்ளை

தாளையடி, செப்.19

பளை பஸ் நிலையத்தில் உள்ள கடை ஒன்று இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு, கடையின் பிற்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-144)

எண்மர் விடுவிப்பு

மாங்குளம், செப் 19

மாங்குளம் இராணுவ முகாமில் நீண்ட காலமாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எண்மர் விடுவிக்கப்பட்டனர்.

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த இ யோசேஸ்வரன், இ. ஜெயதீஸ்வரன், சி. அமிர்தலிங்கம், த. கிருஷ்ணபெருமாள், சிறீரஞ்சன், ஜெயபாலசிங்கம், கோவிந்தசாமி, மற்றும் துணுக்காயைச் சேர்ந்த ஆனந்தராசா ஆகியோரே அவர்கள். (ஓ-94)

முகாம் அகற்றப்பட்டது

குருநகர், செப் 19

யாழ். செயலகத்திற்குச் சமீபமாக சண்டிவீதியில் அமைந்திருந்த அமைதிப் படையினரின் தடைமுகாம் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. (ஓ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kailas Brahmi Hair Oil
கைலாஸ் பிரம்மி கூந்தல் தைலம்
இத்தைலத்தை தினமும் சிரசில் பாவித்துவந்தால் தலை முடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு நிவாரணம் தருவதோடு கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், கருமையாகவும் வளரச் செய்யும்.
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளை அன்'சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உதயன்

19 - 09 - 1988 திங்கட்கிழமை

Kailas Catarrah Oil
கைலாஸ் பீனிசத் தைலம்
கண், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு, ஓயாது தும்மல் கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற 21 வகையான பீனிச வகைகளுக்கும் நிவாரணம் தரும்.
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஜனாதிபதித் தேர்தலில்

எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும்

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) கோரியிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் பத்திரிகையில் இந்த வேண்டுகோள் அடங்கிய அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

நாட்டைக் காட்டிக் கொடுத்த கட்சியைத் தோற்கடிக்க தேசியப் பற்றுள்ள மக்கள் அனைவரும் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும்.

பொது வேட்பாளரின் முக்கிய கொள்கையாக 'இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கிழித்தெறிவது' இருக்கவேண்டும்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் பின் வரும் கொள்கைகளையும் அமுல்நடத்தவேண்டும்.

★ இந்திய அமைதிப் படையை உடனடியாக திருப்பி அனுப்பவேண்டும்.

★ மாகாணசபை முறையை உடனே ரத்துச்செய்யவேண்டும்.

வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாட்டை மீட்கும் ஒரு நடவடிக்கையாக ஜனாதிபதிதேர்தலை மக்கள் அணுக வேண்டும்.

இனப் பிரச்சினை, சகலரும் சமம் என்ற அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும்.

சிங்களத்துக்கு கொடுக்கப்பட்ட அந்தஸ்து தமிழுக்கும் வழங்கப்படவேண்டும். தரப்படுத்தல் முறை ஒழிக்கப்படவேண்டும்.

எந்தப் பிரச்சினையையும் அணுகும் முறை இனரீதியாக அல்லாமல் சமத்துவ அடிப்படையில் இருக்கவேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

(இ-எ)

ஜே. வி. பி. அறிக்கை

சோவியத் முன்னணியில் அரசியல்கட்சியாக விண்ணப்பம்

சோல், செப். 19

இரண்டு நாள் முடிவில் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற நாடுகள் வருமாறு:

	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
சோவியத்யூனியன்	1	—	2
ருமேனியா	1	—	—
பல்கேரியா	1	—	—
சீனா	1	—	1
அமெரிக்கா	—	1	1
சுவீடன்	—	1	1
மே. ஜேர்மனி	—	1	—
தென்கொரியா	—	1	—

(எ)

யாழ்ப்பாணம், செப் 19

அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யக்கோரி ஒரு தீவிரவாதக் குழுக்கள் உட்பட 20 அமைப்புகள் தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்துள்ளன.

ஈ என். டி. எல். எவ், ரெலோ, மு.ஐ.வி.முன்னணி இவற்றில் அடங்கும்.

விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டுவருவதாகஅறியப்படுகிறது.

(இ-21)

தடுத்து வைக்கப்பட்டுள்ள

மலையகத் தமிழர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவர்

கொழும்பு, செப்.19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழர்கள் அனைவரும் விடுவிக்கப்படவிருக்கிறார்கள் என்று இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம் எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அவர்களை விடுவிக்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. செல்லச்சாமி மேலும் சொன்னதாவது;

பொலீஸ்மா அதிபர் தந்த பட்டியலின்படி பூஸா, வெலிக்கட சிறைகளில் 100 மலையகத் தமிழர் உள்ளனர்.

இ. தொ. க. பட்டியலின்படி காணாமற்போனதாகக் கருதப்படும் 28 பேரின் பெயர்கள் பொலீஸ் பட்டியலில் இல்லை.

[illegible] கிழமை காவலில் உள்ள மலையகத் தொழிலாளர் பெயர்கள் முழுவதும் உள்ள பட்டியல் எம்மிடம் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்னர் எப்படி அவர்கள் விடுவிக்கப்படுவர் என்பது பற்றிய விவரங்கள் ஆராயப்படும்.

இப்படி திரு செல்லச்சாமி சொன்னார்.

(இ-எ)

இன்று சங்கானையில்

சங்கானை, செப்.19

சங்கானை சந்தை மைதானத்தில் தியாக தீபம் திலீபனுக்கு இன்று திங்கட்கிழமை நினைவாஞ்சலியும், உண்ணாவிரதமும் நடைபெறுகின்றன.

(இ-29)

றெக்கிளமேசன் சனசமூக நிலைய முன்றலில்

குருநகர், செப்.19

தியாகச் செம்மல் திலீபனின்ஓராண்டு நினைவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 8- மணிக்கு யாழ்-குருநகர் றெக்கிளமேசன்சன சமூக நிலைய முன்றலில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறுகிறது.

24 ஆம் திகதி சனிக்கிழமை காலை8- மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலிலும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 5-மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ-51)

பிரத்தியேக பகல்நேர வகுப்புக்கள்
கணக்கியல்
A/L 1989
ஸ்ரீ
B Com [Hons.]
ஆரம்பம் :
21 - 09 - 1988
விபரங்கட்கு;
393/47, கோவில்வீதி,
நல்லூர்.
வாரத்தில் ஐந்து வகுப்புக்கள் நடைபெறும்
(C-237)

யுத்த....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை பீடத்துக்கு உரிய காலத்தில் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றனவாம்.

எனவே பேச்சுவார்த்தை சம்பந்தமான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதற்கான தகவல்களை அறிந்து கொள்ள ஒரு சில நாட்கள் தாமதம் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறதாம்.

இந்த நிலையில் அமுலில் இருக்கும் ஐந்துநாள் யுத்த நிறுத்தக் காலக்கெடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு போதாமல் போகலாம் என்று இந்தியத்தரப்பில் கருதப்படுகிறதாம்.

எனவே யுத்த நிறுத்தத்தை மேலும் ஒருவார காலத்துக்கு நீடிப்பது குறித்து இந்திய வட்டாரங்களில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக அந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

(அ-ஜ-10)

ஏனைய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்து சிங்கள, முஸ்லிம் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இப்படி திரு. ரணராஜா தெரிவித்தார் என்று 'சண்டே டைம்ஸ்' மேலும் கூறியது. (இ-எ)

உத்தியோக.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த நிறுத்தமாக அமையவேண்டும் என்பதுதான் தமிழீழ மக்களின் விருப்பம்.

யுத்த நிறுத்தத்தை அறிவித்த இந்திய அரசு தமிழீழ மக்களின் பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக சுமுகமான சூழ்நிலையை உருவாக்க மறுத்துவிட்டமை, எமக்கு வேதனையையும் இந்திய அரசின் நோக்கத்தில் சந்தேகத்தையும் உருவாக்குகின்றது. இதுவரை இந்திய அரசு உத்தியோக பூர்வமாக எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை.

வழியைத் தடுத்தனர்

இந்தியாவில் எம பிரதிநிதிகளாக இருந்த புலிகளின் தலைவர்களுள் ஒருவரான கிட்டுவையும் மற்றையோரையும் தேசிய பந்தோபஸ்துச் சட்டத்தின்கீழ் கைது செய்ததன்மூலம் பேச்சுவார்த்தைக்காக இருந்த வழியை முற்றுகத் தடை செய்துள்ளனர்.

இந்திய அரசு எம்மை பேச்சுவார்த்தைக்கு உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேச்சுவார்த்தைக்கான ஓர் சுமுகமான சூழ்நிலை உருவாக்காதவரை, இந்திய அரசுடன் நாம் பேசப்போவதில்லை — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

மரண அறிவித்தல்

திருமதி மரியபாக்கியம் செபஸ்ரியாம்பிள்ளை

திருமதி மரியபாக்கியம் செபஸ்ரியாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) 18-9-88ல் இறைபதமடைந்தார். இவர் திரு. J. செபஸ்ரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் அருட்செல்வி அசெம்ரினா A. C., திருமதி நிர்மலா சுகந்தநாதன் (ஆசிரியை சென் யோல்ஸ் மகாவித்தியாலம், குருநகர்) அருட்செல்வி மரிய கொறற்றி(S. O. J. M. செட்டிகுளம்) திருமதி அஞ்சலா தியாகேசன் (சீலன்) (ஆசிரியை கற்பிட்டி), திரு. அன்ரன் சென்பீற்றர் (சவூதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு.. சுகந்தநாதன் (M. P. C. S. மானிப்பாய்) திரு. T. சீலன் (லண்டன்) சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனன், ஜெனனி, ஜானி, அருண் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இறுதிச்சடங்குகளுக்காக இன்று பி:ப 3-30 மணியளவில் புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி முடிந்ததும் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: J. செபஸ்ரியாம்பிள்ளை

19, டேவிட் ரோட்,
யாழ்ப்பாணம்.

(6697)

மரண அறிவித்தல்கள்

திரு. கி. காசிப்பிள்ளை

(இளைப்பாறிய இலங்கை மத்திய வங்கி உயர் அதிகாரி)

தெல்லிப்பளை மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணர் காசிப்பிள்ளை 12 - 09 - 88 அன்று லண்டனில் காலமானார். இவர் வில்வரட்ணத்தின் அன்புக் கணவரும், விஷ்ணுபாலா (U.K), வேணுபாலா (U.K), ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீகௌரி (U.K), அனுசுயா (U.K), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணி (U.K), ஆதவன் (U.K), ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மினி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரட்ணம், முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் 19 - 09 - 88 இல் நடைபெறும்

இவ்வறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீ. முருகையா

Mrs. K. Kasipillai,
139, Scartho Road,
Grimsby, D. 33, LAN,
U. K.

(6694)

மூளாய்

முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் ஆச்சிமுத்துவின் அன்புக்கணவரும் கமலாம்பிகை, ஞானாம்பிகை, முத்துக்குமாரசுவாமி (ப நோ. கூ. சங்கம், நெடுங்கேணி) சண்முகராசா (செல்வ 'சண்முகா ஸ்ரோர்ஸ்' சுன்னாகம்), தாமோதரம்பிள்ளை (பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம் அளவெட்டி), கௌரிதேவி, சிவகுமார் (U.K) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் சிவானந்தன், நாகலிங்கம்பிள்ளை (Lincolns-Enterprises Colombo), தெய்வச்சிலை, (ஆசிரியை, நெடுங்கேணி மகா வித்தியாலயம்), செல்வகுனேஸ்வரி, ஜெயபவானி, (லிகிதர், ப. நோ. கூ. சங்கம் அளவெட்டி), கதிர்காமநாதன் (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் கமநல சேவைத் திணைக்களம் நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்ணன், சுபதாயினி, விதுரன், ஹரிப்ரியா, வாசீசன், வியாசன், துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 19-09-1988 (திங்கட்கிழமை) பிற்பகல் 2-00 மணிக்கு தகனக் கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்: க. தாமோதரம்பிள்ளை

(6695)

திரு. வ. நடேசலிங்கம்

(உரும்பிராய்)

உரும்பிராய் வயித்திலிங்கம் நடேசலிங்கம் (கலா பிஸ்கட்) காலமானார். இவர் கமலத்தின் அன்புக் கணவரும், சந்திரகுமார் கலைச்செல்வி, கலைமணி, கலையரசி, காலஞ்சென்ற இளங்கோ ஆகியோரின் அன்புத் தந்தையும் கி. ரவீந்திரசோதி, சு. யோகரத்தினம் (Bharin) ஆகியோரின் மாமனாரும், திருமகள். திருவேணி, குமணன், திருவேளில் ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை 20 - 9 - 88 காலை 10 மணிக்கு உரும்பிராய் இளங்காடு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ந. சந்திரகுமார்,
(குமார்)

வெண்ணிலா,
உரும்பிராய்.

(6570)

திருமதி. இராசரத்தினம்மா

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் விதி சுப்பிரமணியம் இராஜசிங்கம் (திருநாவுக்கரசு) என்பவரின் அன்பு மனைவி இராசரத்தினம்மா காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திருச்செந்தூரின் அன்புத் தாயாரும், மலேசியா தம்பிப்பிள்ளை, கந்தையா, இரத்தினம், சேதுபதி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 19 - 09 - 88 ஆந் திகதி திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு கொத்தத்துறை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சுப்பிரமணியம் இராஜசிங்கம்
வட்டுக்கோட்டை (திருநாவுக்கரசு)

(6572)

திரு. வின்சிலோ T. H. சுகிர்தரட்ணம்

(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்)

திரு. வின்சிலோ T. H. சுகிர்தரட்ணம் 17- 9- 88 அன்று காலமானார். அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும் திருமதி. ரஞ்சனி ஸ்பென்சர், றெக்ஸ் பாலச்சந்திரா (R. D. C. Embilipitya) பிறின்ஸ் பிறேமச்சந்திரா [நீர்ப்பாசன இலாகா களுவாஞ்சிக்குடி] திருமதி. ருபி செல்வம் திருமதி. சுகந்தினி வசந்தகுமார், விக்ரர் தேவச்சந்திரா (Troup Estate Talawakelle) ரஞ்சிற் அமுகச்சந்திரா, (S.D & C.C Victoriya Project) மித்திரன் நவச்சந்திரா (Staff St John's College) நிமால் ஜெயச்சந்திரா (V. I. P. Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோ ஸ்பென்சர் [இளைப்பாறிய பால் சபை உத்தியோகத்தர்] திருமதி ரூபினி பாலச்சந்திரா, திருமதி நேசம் பிரேமச்சந்திரா, S T: செல்வம் (Mineral Sands Corporation Pulmoddai] திரு வசந்தகுமார் [இலங்கை வங்கி சுன்னாகம்] திருமதி செரினு தேவச்சந்திரா (H. N. B. Hatton) திருமதி ஷாமினி அமுகச்சந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மேந்திரன், டிலக்ஷினி, நிலாந்தி, ருபேஷ், நிர்மலன், ஷாமலன், குளோறி, கிறிஸ்ரி, றஜிவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
குடும்பத்தினர்

Ratna Green,
Uduvil,
Chunnakam

(6566]

கனகசபை துரைராசா (குணம்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை துரைராசா(16-9-88ல்) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கனசசபை விசாலாட்சியின் அருமை மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரீஜெயராசா, ரவீந்திரராசா (ஜேர்மன்), கிருபானந்தராசா, நகுலேஸ்வரராசா, சற்குருராசா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலராணி (றூபி), கலைவாணி ஆகியோரின் மாமனாரும், அஜீவ், அனுயாவின் பேரனும், கொழும்பு புறக்கோட்டை ஆனந்தா ஸ்ரோர்ஸ் நடராசா, முரசுமோட்டை நல்லநாதன், மணி, தேவி, ஜெயா, ஆகியோரின் மைத்துனரும், அஜித் குடும்பத்தினரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அளவெட்டி மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
(6696) க. நடராசா

லோறன்ஸ் ஷேளி ஜெயரூபன்

லோறன்ஸ் ஷேளி ஜெயரூபன் [Shakkane Trading Co] புதன்கிழமை 14-09-88 அன்று பலாங்கொடையில் அகால மரணமானார். இவர் திரு.Ben லோறன்ஸ் [Saudi-Arabia],திருமதிடல்சி லோறன்ஸ்[ஆசிரியை புனித அன்னாள்கன்னியர்மடம்,மானிப்பாய்] அவர்களின் அன்புப் புதல்வனும், சாலம் சென்ற J.P. நாகலிங்கத்தினதும் திருமதி கிறேஸ் ஜெயமணி நாகலிங்கத்தினதும் மூத்த பேரனும், ஷெறின் (Lanka Garments), மொறின் [உடுவில் மகளிர் கல்லூரி), மோலி (சென். ஜோன்ஸ் கல்லூரி), டல்றின் [உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதி ஆராதனை(19-9-88)திங்கட்கிழமை இன்று மாலை 3.30 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவர்களின் இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் C. S. I. சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தோமஸ் தருமராசா.
(6567) (பெரியப்பா)

முத்துச்சாமி கிருஷ்ணசாமி

(கார் சாரதி)

முத்துச்சாமி கிருஷ்ணசாமி காலமாகிவிட்டார். இவர் முன்னைநாள் பாடசாலைப் பிள்ளைகள் கார் சாரதி முத்துச்சாமியின் மகனும், செல்வமணியம் (Air Ceylon) முன்னைநாள் கார் சாரதியின் தம்பியாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் நாவலர் ரோட், ஆனைப்பந்தியில் நடைபெற்று, இன்று (19-9-88) பகல் 11 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஆதாயமடைந்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) 292/2 Navalar Road, Jaffna on Monday 19th September 1988